4-9-20

உ

திருச்சிற்றம்பலம்.

தஞ்சைவாணன்கோவைமூலம்

நாற்கவிராசநம்பி
அகப்பொருள்விளக்கத்திற்கிலக்கியமாகப்
பொய்யாமொழிப்புலவர்
இயற்றியது.

———

இஃது

குன்றத்தூர்-அஷ்டாவதானி

சொக்கப்பநாவலர்

செய்த உரையுடன்

தொண்டைமண்டலம் ஆங்கிலோ வெர்னாக்யுலர்
கல்விச்சாலை பிரின்ஸிபல்
திருமயிலை-தெய்வசிகாமணிமுதலியாரவர்களாலும்,
திருமயிலை-வித்வான்
சண்முகம்பிள்ளையவர்களாலும்
பலபிரதிருபங்களைக்கொண்டு
பரிசோதிக்கப்பட்டு,

ப. மு. செல்வராசமுதலியாரவர்களால்
தமது
சென்னை அமெரிகன் அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

———

இதன் விலை ரூபா. அணா. 2-0

1893.

அறிவிப்பு.

இப்புத்தகம் வேண்டுவோர் சென்னைப் பெத்துநாயக்கன்பேட்டைத் தங்கசாலைவீதி அமெரிகன் அச்சுக்கூடத்திலும், ஷை வீதியில் தொண்டைமண்டலம் கல்விச்சாலையிலும், கும்பகோணத்தில் சவுளிக்கடை இராமசாமி செட்டியாரிடத்திலும் விலைக்குப் பெற்றுக் கொள்ளலாம்.

திருச்சிற்றம்பலம்.

முகவுரை.

சந்தனப் பொதிகைச் செந்தமிழ் முனிவனுஞ், சவுந்தரபாண்டியனெனுந் தமிழ் நாடனுஞ், சங்கப்பலகையுந் தழைத்தினி தோங்கும், மங்கலப்பாண்டி வளநாட்டின்கண், நீடொளிமாடக் கூடலின் மேவிய ஆலவாயடிகள் கைதவன்பொருளின்மையை நாடிவருந்திய ஞான்று "அன்பி னைந்திணைக் களவெனப்படுவ" என்பதுமுதலிய அறுபது சூத்திரங்களையுடைய வோர்நூலை யருளிச்செய்தனர்.

அதற்குத் தனித்தனி யுரைகண்டார் களவியற் பொருள்கண்ட கணக்காயனார்மகனார் நக்கீரனார் முதலாயினோர். அவ்வுரையுட்சிறந்தது நக்கீரனார்செய்த வுரையேயென விளக்கினர் உருத்திரசன்மனார். இதுநிற்க,

தொல்காப்பியம் எழுத்துச் சொற் பொருளென்னு மூன்றதிகாரத்ததாகவும், பொருளே வீடுபேற்றிற் குரியதாகவும் வழங்கப் பொருளாராய்ச்சியின்மையாயதென்பது அசங்கதமாக முடிவெய்தும். இனிப்பொருளே சிறந்தமை, காமருதில்லை மாமணிமன்றில் நாடகநவிற்றும் ஆடகப்பேரொளியாம் அற்புதன் போதவூர்நாடிய வாதவூரடிகளை யெய்தித் தன்னை ஐந்திணைக்கோவை பாடுகெனப் பாடுவித்துக்கொண்டு அதனீற்றில் தன்கைச்சாத்திட்டதே சாலு மென்பது.

பொருளாராய்ச்சியைப் பிற்றைஞான்று குறைவறநடாத்தினார் நன்னூலார் முதலாயினோர். அவருள் நாற்கவிராசநம்பியார் முன்னூலாகிய தொல்காப்பியம், இறையனார் அகப்பொருள் முதலிய நூற்கு அகப்பொருள்விளக்க மென்றொருநூலை வழிநூலாக இயற்றினார். அன்னது ஏனைய நூற்களின் உண்மைக் கருத்தடங்கி யாவருக்குமினிதுவிளங்க விருக்க, அதுகண்ட பொய்யாமொழிப்புலவர் பெருமான் தஞ்சைவாணன் என்னும் பெருந்தகைமேல் ஐந்திணைக் கோவையாம் அரும்பிரபந்தமொன்றருளிச்செய்தனர். அது திருக்கோவையாரையொழிந்த பலகோவைகளினுஞ்சிறந்தது. கோவை

யென்பது பலதுறைகளா னமைந்த தென்பதை உரையாசிரியர் கூறிய வுரையானுமுணர்க. அது புலவர்பாடும் தொண்ணூற்றாறு பிரபந்தங்களினொன் றென்பதைப் பன்னிருபாட்டியல் முதலிய நூற்களாலுணர்க.

இக்கோவைப்பிரபந்தம் களவியல் வரைவியல் கற்பியல் என்னுங் கைகோள் மூன்றானு முறைக்கப்பட்டதன்றி இடையிடையே உரையாசிரியரான் அகப்பொருட்கிணங்கச் சிலதுறைகளைத் திருக்கோவையாரினின்றும், அம்பிகாபதி கோவையினின்றும் சேர்க்கப்பட்டிருக்கின்றது.

உரையாசிரியராகிய குன்றத்தூர்-அஷ்டாவதானம். சொக்கப்ப நாவலர் தாமெடுத்துக்கொண்ட கோவைப்பிரபந்தம் அகப்பொருள் விளக்கத்துக் கிலக்கியமேயாயினும், தொல்காப்பியப் பொருளதிகாரவுரை பெரும்பான்மையும் இறையனாரகப்பொருளுரை சிறுபான்மையும் நோக்கிச்செய்தனரென்பது அவருரையானினிதுவிளங்கும்.

இவ்வுரைகலந்த நூலை அச்சிடத்தொடங்கிய காலத்தில் எமக்குக் கையிலிருந்த நூலேந்து பிரதி ரூபங்களொழிய யாழ்ப்பாணம் நல்லூர் கனம்பொருந்திய சதாசிவப்பிள்ளையவர்களும், வித்வசிரோமணி திருக்கோணமலை - கனகசுந்தரம்பிள்ளையவர்களும், காஞ்சிபுரம் - பச்சையப்பமுதலியார் கல்விச்சாலைக் காரியதரிசியாயிருந்து காலஞ்சென்ற ஈக்காடு - பாலசுந்தரமுதலியாரவர்களும், திருத்தணிகை - இயற்றமிழாசிரியர் விசாகப்பெருமாளையரவர்கள் சட்டகர் குமாரர் குமாரசுவாமி ஐயரவர்களும் பிரதிரூபங்களைக்கொடுத்துதவினர். அவர்கட்கெம்மாலாய கைம்மாறியாது செய்யவல்லேம்.

ஆயினும், இவ்விலக்கியத்தைப் பதிப்பிக்கத்தொடங்கி மேற்கண்டவாறு எம்பாற்கிடைத்த பிரதிரூபங்களைப் பரிசோதித்து வருங்கால் யாவும் ஒன்றுக்கொன்று ஒரிடத்தினன்றிப் பலவிடத்தினும் முறையெழுதுவோரால் பிழைத்ததும் விடுத்ததுமாகிய செயலானும், பூச்சுகளின் வாய்ப்பட்டுப் பழுதெய்தியமையினானும் ஆங்காங்கு அவையிற்றின் பொருள்களின்னனவென எளிதிற்றேர்தற்கு இடம்பெறுமற் போயினமையின் இதுகாறும் காலந்நீட்டித்ததெனவறிக.

இதன்றியும், உரையாசியர் இப்பிரபந்தத்திற்கு உரையெழுது முறையில் ஆங்காங்கு மேற்கோளாகத்தெரித்த செய்யுள் முதலிய

வைகளுட் சில இறையனாரகப்பொருளுரையில் உதாரணச்செய்யுள்களாக இருப்பதுகண்டும் அவை இன்னூ நூலின்கண்ணுள்ளவையெனத்தேர்ந்து தெளிய வருந்தி முயன்றும் அவ்வாறு தேர்ந்துணரச் சாத்தியமின்மையின் அவற்றை § இக்குறிப்பிட்டு வறித அச்சிட்டு விடுத்தனம்.

இதுவுமன்றி, மற்றைமேற்கோள் ட் பலவற்றையும் எம்பாற் கிடைக்கப்பெற்ற சிந்தாமணி, கல்லாடம் முதலிய இலக்கியங்களினும், எட்டுத்தொகை பத்துப்பாட்டு, பதினெண்கீழ்க்கணக்கு முதலிய சங்கச்செய்யுள்க... ம் இன்னது இந்நூலின்கண்ணுள்ளதென அவ்வப்பக்கத்தினடியிற் குறிப்பிட்டுக்காட்டியும், இன்னும் விளங்காதன சிலவுளவாகலின் அவையி றை இதன்பின்னர் விளங்காமேற்கோள்களெனச் சேர்த்து மிரு ன்றும்.

ஆகவே, கல்விகேள்விகளா ...றைவுற்ற மூதறிவுடையோ ரெவரேனும் இப்பதிப்பில் யாதொருபிழை பொதுளியிருப்பின் அதனையேனும், விளங்காமேற்கோள்களுள் யாதேனும் தங்கள்நூலாராய்ச்சியிற் காணப்பட்டுள்ளதாயின் அதனையேனும் எடுத்துக்காட்டுவீராயின் அவற்றை அடுத்த பதிப்பிலெடுத்துக் காட்டுவதுமன்றி அப்பேருதவிக்கு அவர்பால் நன்றியறிதலாகியகைம்மாறு எம்பாற் கணிக்கற்பாற்றன்றெனக் கூறுகிற்கின்றோம்.

திருவாதவூரடிகளருளிச்செய்த திருக்கோவையாருக்கு இவ்வுரையாசிரியர் ஒருவரோ சேனாவரையநூரைசெய்தனர் என்றமையானும் பலரும் பேராசிரியரெனக் கோடலானும் பேராசிரியருரையென்றே காட்டினும்.

ம. தெ., ம. சு.

விளங்காமேற்கோள்கள்.

பக்கம்.	வரி.	மேற்கோள்கள்.
௩	௨௬-௨௭	“களவினெழுக்கமு ... ... னகமெனமொழிப.”
௫	௨௫-௨௬	“மெய்க்கிளையாழோர்...நிகழ்தல்கடனெனமொழிப.”
௧௧	௭-௧௦	“உரையுறைநிந்தமிழ் ... ... திருநுதலே.”
௧௬	௧௦	“இளையரிநாணற்கிழங்குமணற்கீன்ற”
௩௧	௨௩-௨௫	“கொல்லல்கொல்லல் ... புல்லலெஞ்ஞான்றும்.”
௩௨	௮-௧௧	§“மின்னிற்பொலிந்த ... வென்னீபுலம்புவதே.”
,,	௧௨-௧௫	§“பொன்னூர்புனைகழற் ... ... னழுங்கற்கவே.”
௩௩	௯-௧௨	“வெட்சிநிரைகவர்தல் ... வளைத்தலாகுமுழிஞை.”
௪௩	௨௦-௨௧	“பொருளொதுபுணர்வே ... மருளவரூஉமரபிற்றென்.”
௬௩	௧௧ ௧௪	“தொய்யில்வனமுலையுந் ... ... யிதுவந்தவாறு.”
௬௪	௯-௧௨	§“ஆணெடுந்தானையை ... ... தடஞ்சுனையே.”
௬௬	௧௮-௧௯	“நாணநடுங்கவு ... காணுங்காலைத்தலைமகடேத்து.”
௬௭	௨௮-௨௯	“ஒப்பில்கூட்டமு ... ... சிதைவும்பெருந்திணை.”
௬௮	௧	“அகத்திற்சிதைந்ததுபுறத்தின்பாற்படும்.”
௭௯	௨௯-௩௨	“துவைக்குந்துணிமுன்னீர் .... மண்ணலார்பாடல்.”
௮௬	௨௫-௨௮	“வையைக்கிழவன் ... நாடறியக்கவ்வையொருங்கு.”
௧௦௫	௨௭-௨௮	“நல்வினையாற்று ... ... தூற்றலினல்வந்ததுயர்.”
௧௧௨	௪	“ஆங்கணன்கேதலைப்பெயன்மரபே.”
௧௧௬	௧௫	“வாண்மலைந்தெழிந்தோனைமகிழ்ந்துபறைதூங்க”
௧௨௫	௬-௭	“ஆடவர்களெவ்வா ... ... மதிற்கச்சிமாண்பு.”
,,	௧௨	“கோடாப்புகழ்மாறன்”
௧௪௨	௨௫	“வம்புறுவென்றுசெப்புற்றதோர்பகை”
௧௪௯	௪-௭	§“அடிக்கண்ணதிரும் ... ... துயின்றிலவே.”
௧௬௫	௨௫	“வேங்கைசண்பகம்வண்டுணுமலர்”
௧௬௭	௩௧	“வாளிரண்டுமாறு ... பொன்மழைக்கண்மாதரார்.”
௧௮௨	௨௯	“வளைவிடைவைத்து ... ... தென்மஞூர்புலவர்.”
௧௮௭	௨௨	“உரற்கால்யானை ... ... செந்நாயேற்றை.”
௧௮௯	௧௯	“கங்கையார்தாங்குங் ... மெய்குளிர்மின்கண்டு.”
௨௨௩	௩௪	“குன்றி-நெஞ்சுபகவெறிந்த... வெஞ்சுடர்நெடுவேல்”
௨௩௬	௨௦	“அனைநிலைவகையோடாங்கெழுவகையால்.”
,,	௨௩	“காரொதிர்கானம்பாடினேமாக”
௨௬௩	௫	“கடலன்னகாமமுழந்து”
௨௬௬	௨௫-௨௬	“தேவர்குலமே சாலையம்பலமே”

பிழைதிருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
௩	௯	மாக	காம
௧௯	௨௪	தலைவி	தலைவன்
௨௯	௫	- புழுகு	————
௩௦	௨௯	பிரிவென்னுங்	பிரிவனென்னுங்
௭௮	௧௪	சாதகங்குரமென்னுஞ்	சாதுரங்கமெனுஞ்
௮௦	௧௪	†"கோள்கொத்துக் ... குலைவாழை"	கோள்-கொத்து. † "கோட்டெங் கின் குலைவாழை"
௮௦	௧௫-௧௬	கோள்வண்கோட்	வண்கோட்
௯௩	௧௯	கண்	கள்
௯௪	௨௧	மகள்	மகன்
௯௫	௨௧	முல்லையுஞ்	முல்லையந்
,,	௨௯	,,	,,
௯௬	௬	வந்தவர்	வந்தவா
௯௮	௧௨	இ - ள்.——	இ-ள். தஞ்சைவாணன்வெற்பா ! இலாங்கலி தென்னை மா பாக்கு பலா வாழையுமாகிய மரங்கள்
௧௦௧	௧௫	தழை	தமைக்
,,	௧௭	—— வாடி	மெய்வண்ணம்வாடி
௧௦௩	௧	யுடைய——	யுடையவஞ்சி !
௧௧௮	௧௦	செல்லல்	சொல்லல்
,,	௧௩	கூறலுங்	கூறலினுங்
௧௧௯	௮	கிளவி——	கிளவியும்
௧௨௮	௨௭	மென்	மண்
௧௩௦	௨௩	வேண்டினன்	வேண்டினள்
௧௩௪	௩௪	விர்தை. வெற்றி	விர்தைவெற்றி
௧௩௬	௧௮	சொல்லை	செல்லை
௧௩௮	௨௪	வேளின்	வேலின்
௧௩௯	௨௮-௩௦	தலை...குரியன	————
௧௪௦	௩	சேறலு	சேரலு
௧௫௧	௧௪	வகை	மங்கை
,,	௧௪-௧௫	குழலினின்றுஆயர்	குழலி ! நின்றுயர்
௧௫௫	௧௪	யேன்——	யேன் என்
,,	௧௯,௨௦	தலைவர்க்	தலைவற்
௧௬௫	௫	கூறிவந்த	கூறிவந்ததனை
௧௮௬	௯	மகவும்	அகவும்;
௧௮௯	௮	வாயினது	வானது
,,	௧௫	நான்கே	மன்ன
௧௯௦	*	செ. ௩௨.	செ. ௧௯.
௧௯௧	*	து. ௧௬.	து. ௩௨.

பிழைதிருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
௧௯௨	௫.	வெள்வளையீர்!	வேலனையீர்!
௧௯௩	௧௦	கரிய	அரிய
௧௯௭	௩௧ ௭	வாளிரண்டு ... மாதரார்"	"வாளிரண்டு...பொன்மழைக்கண் மாதரார்"
௧௯௯	¶	சே. ௩௩௪.	சே. ௩௨௯.
௨௦௦	௨௯	சொன்ன——	சொன்னசொல்லை
௨௦௨	௩௩	பெருவாய்ப்	பெருளாய்ப்
௨௦௩	௧௬	இ - ள்.——	இ - ள். நல்லாய்!
,,	௩௦	யின்மேல்	யென்மேல்
௨௦௬	௨௩	யொழித்	யொழிக்
,,	௨௯	புனறறு	புனறரு
௨௦௭	௨௯	நீர்——	நீர் இடப்பாகம் நினைத்தலால்
௨௧௩	௬	பார்வைகளுள்.	பார்வைகளும்
,,	*	சூ. ௧௧௩.	சூ. ௨௨.
௨௧௮	௨௬	அவன்	அவள்
,,	௨௭	ளென்க	னென்க
௨௨௦	௮	வளை	விழை
௨௨௧	௧௮	கொடியால்	கொடியாள்
௨௨௨	௧௭	பாலன	பாலான
௨௨௩	௧௪	அழுகின்ற——	அழுகின்ற நினது
௨௨௪	௧௧	யேய்தினேன்	யெய்தினேன்
௨௩௦	௩௦	—— பாடு	வண்டு - அம்பு. பாடு
௨௩௧	௩௧	ளல்லள், தையலார்	ளல்லது அயலார்
௨௩௨	*	சூ. ௧௯.	சூ. ௨௦.
௨௩௪	௧௦	அலங்தோர்	அலர்ந்தோர்
,,	,,	பூட்டு	பூட்
௨௪௭	௨௧	இ - ள்.——	இ - ள். முகிழ்நகையே!
௨௫௩	௧௮	இ - ள்.——	இ - ள். கோமளமே!
௨௫௯	௧௫	ஒ	எ
௨௬௧	௨௧	மனத்தொடு	யணத்தொடு

குறிப்பு.—(1): ——— இக்குறி பிழையின்கீழிருக்கின் விடுபட்டதனையும் திருத்தத்தின் கீழிருக்கின் நீக்கப்பட்டதனையும் விளக்கும்.

(2). ௨௧௭-ம் பக்கம் தன்பதியணிமைசாற்றல் என்னுங் கிளவிக்கு 'இவ்விடத்தில் நம்மூரில் வைகிப்போதல் பொருந்தாது எம்பதிப்போதல் வேண்டுமென்று தலைவன் கூறியவழி தலைவன்றன்பதி அணித்தென்பதனைக் கண்டோர் கூறுதல்'.—எனப் பொருள்கொள்க.

(3). ௨௫௮-ம் பக்கம் ௨௫-ம் வரிக்குப்பின் 'இச்சொற்கு மனம் பொறுத்தேன் சொல்லாய்' என்பதனைச் சேர்த்துப் பாடமோதுக. இவ்வாறு இங்குவிடுபட்டதனை அடுத்த செய்யுள் விசேடவுரையின் தலைப்பிற்காண்க.

உ

திருச்சிற்றம்பலம்.

தஞ்சைவாணன்கோவை

உரைச்சிறப்புப்பாயிரம்.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

பொய்யா மொழியா னெனும்பெரியோர்
புகலும் வாணன் கோவையுரை
மையார் சோலைக் குன்றத்தூர்
வளரட் டாவதானி சொக்கன்
கையார் கனிபோ லகப்பொருளிற்
காணுஞ் சங்கை யெலாந்தீர
மெய்யாந் தொல்காப் பியநூலின்
விதியா லெழுதி விளக்கினனே.

இது மன்னுபுகழ்பெற்ற வாணன் றன்மேல் பன்னிய கோவையுரை பகர்ந்தான் இவன் என்பது.

இதன்பொருள்.

திரிபுபடாத சொல்லினை யுடையானென்று யாவரானும் புகழப்படும் பெருமையுடையராற் சொல்லப்படும் வாணன் என்னும் இயற்பெயருடையானது கோவை யென்னும் பாட்டிற்கு நால்வகைத்தாகிய உரையை, மேகங்களைப்பொருந்தாநின்ற சோலைசூழ்ந்த குன்றத்தூரென்னும் நகர்வளர்தற் கேதுவாகிய அட்டாவதானத்தை யுடையனாகிய சொக்கன் என்னும் இயற்பெயரையுடைய நாவலர்பிரான், அகங்கையிற்பொருந்திய நெல்லிக் கனிபோலத் தன்னால் விபரீதம் ஐயமறக் காணப்படும் அகப்பொருளிடத்துப் பிறர்க்குத் தோன்றுங் கடாவிடையெல்லாந் தீரும்படி உண்மையாமென்று, அதங்கோட்டாசிரியர் முதலானோராற் கொள்ளப்படுந் தொல்காப்பியன் என்னும் முனிவனாற் செய்யப்பட்டதாய் நிரம்பிய இலக்கணத்ததாய அந்நூலினியல்பால் எழுதுதலைச்செய்து, யாவரும் அறியும் பொருட்டுத் தெரிவித்தானென்க.

திரிபாவது ஒன்றையொன்றாகக்காண்டல். அது பொய்யாமொழியானெனவே வந்தனை முதற்காரணமாகவுடைய பாவினையும் உடையானென்பதனானே பெற்றாம். சொல்லினையும் பாவினையுந் திரிபின்றி யுணரவே அவ்

வுணர்ச்சிக்குப் புயுணுகிய ஒழுக்கமுடையா னென்பதாம். இவ்வகையாய பேருணர்வுடையராற் புகழப்பட்டானெனவே அவனது பெருமை கூற வேண்டாவாயிற்று. 'வளரட்டாவதானி' என்றது அப்பெருண்மைக்கண் வந்த வினைத்தொகை.

* "தோன்றிற் புகழொடு தோன்றுக வஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று."—என்னும் திருவள்ளுவர் கூறிய திருக்குறளினது பயனுக்கு உதாரணம் இவனென்பது பெற்றாம். முன்னை நல்வினை யுண்மையாற் பிறந்த நுண்ணறிவான் இவன் காண்டலாற் சங்கையின்றென்பது தோன்ற, தானும் அகப்பொருளென மாறிப் பிறர்க்குத் தோன்றுமென வருவித்துரைக்க. நிரம்பிய இலக்கண முணராதார் தாம் வேண்டியவாறே கூறிய கூற்றைத் தன்மொழியா னீக்கி, மாசுண்ட மணியைத் துடைப்பார்போன்று, செய்தானென்பது விளக்கினான் என்பதனாற் பெற்றாம். 'குன்றத்தூர் சொக்கன்கையார் கனிபோல் கோவைக்கு உரையெழுதி விளக்கினன்' என ஒருதொடராக்குக.

பொய்யா என்னும் எதிர்மறைப் பெயரெச்சம் **மொழியார்** என்னும் வினைக்குறிப்புப் பெயரது முதனிலையாகிய **மொழி** யென்னுங் கருவிப் பெயர்கொண்டு முடிந்தது. **புகலும்** என்னும் பெயரெச்சம் **கோவை**யென்னுஞ் செயப்படுபொருள் கொண்டது. **வாணன் கோவை** யென்றவழி ஆறாம் வேற்றுமைச் செய்யுட்கிழமைக்கண் வந்தது. **சோலைக்குன்றத்தூர்** என்பது உருபும் பொருளு முடன்றொக்க தொகை. **அட்டாவதானி** என்பது வடசொன்முடிபாகிய குறிப்புவினைப் பெயரெச்சக்குறிப்பாய்ச் **சொக்கன்** என்னும் பெயரோடியைந்தது.

இது † "குறிப்புமுற்றீ ரெச்சமாகலு முளவே." என்னும் விதிபெற்றது. நச்சினார்க்கினியர் எச்சமுற்றாதலன்றி முற்றெச்சமாகாதென்று கூறினாராலோவெனின், அஃ திலக்கணமன்று; குறிப்பு வாய்பாட்டான் எச்சங்கண்டன்றே முற்றாய்த் திரிந்ததென்று சொல்லுதல்கூடுவது: அது காணாது முற்றே கூறினமையா லென்க.

ஐ என்பது ஆகுபெயர். **போல்** என்னும் உவமவுருபு வினையுவமத்தின்கண் வந்தது. **தொல்காப்பியநூல்** என்றவழி மூன்றாம்வேற்றுமை யுருபும் பொருளுமுடன்றொக்க தொகை. நிலைமொழியீறுதிரிந்து கருத்தாகுபெயராய்ப் பண்புத்தொகை யாயிற்றெனினும் இழுக்காது.

உரைச்சிறப்புப்பாயிரம்

முற்றும்.

---

* திருக்குறள், செ. ௨௩௬. † நன்னூல், சூ. ௩௫௧.

உ

கடவுள் துணை.

தஞ்சைவாணன்கோவை.

மூலமும் உரையும்.

முதலாவது

களவியல்.

கைக்கிளை.

காட்சி.

காட்சி என்றது தலைமகன் தலைமகளைக் காண்டல். தலைமகனென்றுந் தலைமகளென்றும் கூறிய இவர் யாரெனின் இல்லது, இனியது, நல்லது என்று புலவரானாட்டிக் கூறப்பட்ட மூன்றனுள் இல்லதாகிய புனைந்துரை யாற் றோன்றினாரென்க. இவரது இலக்கணம் யாதோவெனின், பிணி மூப்பு இறப்புகளின்றி எஞ்ஞான்றும் ஒரு தன்மையராய் உருவும் திருவும் பருவமும் குலனும் குணனும் அன்பும் முதலியவற்றான் தம்முள் ஒப்புவமை யராய்ப் பொருவிறந்தாரென்ப. என்னை, —

* "பிறப்பே குடிமை யாண்மை யாண்டோ
டுருவு நிறுத்த மாக வாயில்
நிறையே யருளே யுணர்வொடு திருவென
முறையுறக் கிளந்த வொப்பினது வகையே,"—என்னும் மெய்ப் பாட்டியற் சூத்திரவகையான் இப்பத்துவகையும் ஒத்திருப்பது இலக்கணம்; இவற்றுள் ஆண்டு என்பது இருவர்க்குங் களவிற்காணும்போதில் எத்தனை யாண்டு கூறவேண்டுமென்று கூறின், பதினைந்தாண்டும் பத்துத் திங்களும் புக்கதலைமகனும், பதினோராண்டும் பத்துத்திங்களும் புக்கதலைமகளும் களவொழுக்கத்தில் நிகழ்வரொன்றுணர்க. என்னை, —

† "களவினுட் டவிர்ச்சி வரைவி னீட்டம்
திங்க ளிரண்டி னகமென மொழிப."—எனவும்,
"களவி னொழுக்கமுங் காலமுந்
திங்க ளிரண்டி னகமென மொழிப."—எனவும்வரும் சூத்திரங் களாற்கண்டுகொள்க.

---

* தொல்காப்பியம், பொருளதிகாரம், மெய்ப்பாட்டியல், சூ. உரு.
† இறையனார் அகப்பொருள், சூ. ௩௨.

னும் பெருவிசும்புமனையார் ஆளிமொய்ம்பினர் அரிமான்றுப்பினர் பற்பனூறாயிரவர் சாவேலினையர் தற்சூழச்செல்வனென்பது முடிந்தது. இவளும் உடன்பிறந்து உடன்வளர்ந்து நீர் உடனாடிச் சீர் உடன்பெருகி ஒல் உடனாட்டப் பால் உடனுண்டு பல் உடனெழுந்து சொல் உடன் கற்றுப் பழமையும் பயிற்றியும் பண்பும் நண்பும் விழுப்பமும் ஒழுக்கமும் மாட்சியும் உடையார் பற்பனூறாயிரவர் கண்ணுமனமுங்கவரும் ஒண்ணுதன் மகளிர் தற்சூழத் தாரகை நடுவண் தண்மதிபோலச் செல்வாளென்பது முடிந்தது. முடியவே, தமியராய்ப் புணர்ந்தார் என்பதனோடு மாறுகொள்ளுமெனின், மாறுகொள்ளாது; என்னை, அவள் ஆயங்களும் பொழிலிடம் புகுதலும் விளையாட்டு விருப்பினாற்பிரியும். என்னைபிரியுமாறெனின், ஒருவர் ஒருவரின்முன்னர்த் தழை விழையுத்தக்கன தொடுத்துமென்றும், கண்ணி தண்ணறுநாற்றத்தன செய்துமென்றும், போது மேதக்கன கொய்துமென்றும், மயிலொடு மாறாடுதுமென்றும், குயிலொடு மாறுகூவுதுமென்றும், அருவியாடி அஞ்சுனை குடைதுமென்றும், வாசமலர்க்கொடியில் ஊசலாடுதுமென்றும் பரந்து, அப்பாலுள்ளார் இப்பாலுள்ளார் கொல்லோவென்றும், இப்பாலுள்ளார் அப்பாலுள்ளார் கொல்லோவென்றும் இவ்வகை நினைத்துப் பிரிபவென்பது.

இவ்வகை அவளைத் தமியராய்ப் பிரிபவெனின், எட்டியுஞ்சுட்டியுங் காட்டப்படுங் குலத்தனளல்லளாகலானும், பான்மை அவ்வகைத்தாகலானும் பிறவாறு நினையார் பிரிபவென்பது. ஆயின், இவ்வகைப்பட்ட ஆயத்திடை மேனாட்பிரிந்து பயின்றறியாதாள் தமியளாய் நிற்குமோவெனின், நிற்கும்; தான் பயின்ற இடம் தன் ஆயத்தினோடொக்கு மாகலானென்பது. யாங்ஙனம் நிற்குமோவெனின், சந்தனமும் சண்பகமும் தேமாவும் தீம்பலவும் ஆசினியும் அசோகும் கோங்கும் வேங்கையும் குரவமும் விரிந்து, நாகமும் திலகமும் நறவும் நந்தியும் மாதவியும் மல்லிகையும் மௌவலொடு மணங்கமழ்ந்து, பாதிரியும் பரவைஞாழலும் பைங்கொன்றையும் பிணியவிழ்ந்த பொரிப்புன்கும் புன்னாகமும் உருக்கொடு முகைசிறந்து, வண்டறைந்து, தேனார்ந்து, வரிக்குயில்கள் இசைபாடத், தண்டென்றல் இடைவிராய்த் தனியவரை முனிவுசெய்யும் பொழிலது நடுவண் ஓர் மாணிக்கச் செய்குன்றின்மேல் விசும்பு துடைத்துப் பசும்பொன்பூத்து வண்டுதுவைப்பத் தண்டேன் துளிப்பதோர் வெறியுறு நறுமலர் வேங்கை கண்டாள்; கண்டு பெரியதோர் காதல் களிகூர்ந்து தன் செம்மலர்ச் சீறடிமேற் சிலம்பு கிடந்து சிலம்பு புடைப்ப, அம்மலரணிக் கொம்பர் நடை கற்பதென நடந்து சென்று, நறைவிரி வேங்கை நாண்மலர் கொய்தாள்; கொய்தவிடத்து மரகதமணி விளிம்படுத்த மாணிக்கச் சுனைமருங்கினதோர் மாதவிவல்லி மண்டபத்துப் போதுவேய்ந்த பூநாறு கொழுநிழற் கீழ்க் கடிக்குருக்கத்தி கொடிபிடித்துத் தகடுபடு பசும்பொற் சிகரங்களின் முகடுதொடுத்து வந்

இழிதரும் அருவிபொன்கொழித்து மணிவரன்றி மாணிக்கத்தொடு வயிர முந்தி அணிகிளரருவி ஆடகப்பாறைமேல் அதிர்குரன் முரசின்கணிரட்ட, வண்டுந்தேனும் யாழ்முரல, வரிக்குயில்கள் இசைபாட, தண்டாது தவிசு பட, போர்த்ததோர் பளிக்குப்பாறை மணித்தலத்துமிசை நீல ஆலவட்டம் விரித்தாற்போலத் தன்கோலக் கலாவங் கொளவிரித்து முளையிளஞாயிற்று இளவெயில் எறிப்ப ஓர் இளமயில் ஆடுவது கண்டு நின்றாள். அப்பால் தலைமகனும் பற்பன்னூறாயிரவர் கூர்வேலிளையாரொடுகுளிர்மலைச்சாரல் வேட்டம் போய் விளையாடுகின்றான், ஆண்டெழுந்ததோர் கடுமாவின்பின் னோடிக் காவலிளையவரைக் கையகன்று, நெடுமான்றேரொடுபாகனைநிலவு மணற் கானியாற்று நிற்கப் பணித்து, தொடுகழல் அடியதிரச் சுருளிருங் குஞ்சி பொன்ஞாணிற் பிணித்து, கடிகமழ் நறுங்கண்ணி மேற்கொண்டு வண்டு மணமயர, அஞ்சாந்தின் நறுநாற்றம் அகன்பொழிலிடைப் பரந்து நாற, ஆடுசிலை ஒருகணை ஏந்திவடிவுகொண்ட காமன்போலச் சென்று அவள் நின்ற இரும்பொழில்புகும். அஃதியாங்ஙனமோ வெனின், வட கடலிட்ட ஒருநுகம் ஒருதுளை தென்கடலிட்ட ஒருகழி சென்று கோத் தாற்போலவும், வெங்கதிர்க்கனலியுந் தண்கதிர்மதியமுந் தங்கதி வழுவித் தலைப்பெய்தாற்போலவும் தலைப்பெய்து ஒருவரொருவரைக் காண்டல் நிமி த்தமாகத் தமியராவரொன்பது.

புயலே சுமந்து பிறையே யணிந்து பொருவிலுடன்
கயலே மணந்த கமல மலர்ந்தொரு கற்பகத்தின்
அயலே பசும்பொற் கொடிநின்ற தால்வெள்ளை யன்னஞ்செந்நெல்
வயலே தடம்பொய்கை சூழ்தஞ்சை வாணன் மலயத்திலே.

உரை கூறுமிடத்து † நான்குவகையாற் கூறப்படும். அவை யாவை யெனின், கருத்துரைத்தல், கண்ணழித்தல், பொழிப்புத்திரட்டல், அகலங்கூறல் எனநான்கு வகைப்படும். அவற்றுள் கருத்துரைத்தலாவது,— சொல்லப்படுஞ் செய்யுளின் கருத்தையுரைத்தல். கண்ணழித்தலாவது,— பதப்பொருளுரைத்தல். பொழிப்புத்திரட்டலாவது, — அச்செய்யுளிற் கூறப்படும் பொருளைத்தொகுத்து ஒருபிண்டமாகக் கூறுதல். அகலங்கூறலாவது,— அச்செய்யுளின் பொருளைத் தூய்மை செய்தற்குக் கடாவிடை யுள்ளுறுத்தி ஐயந்தீர விரித்துக் கூறல்.

அவற்றுள் இச்செய்யுட்குக் கருத்துரை யாதோவெனின், களவி கூறவே கருத்துரையாய் விளங்கி நின்றதெனக் கொள்க.

ப-ரை. புயலே சுமந்து - புயலைத்தாங்கி, பிறையேஅணிந்து-மதிக்கலையைத்தரித்து, பொருவிலுடன் கயலேமணந்த கமலம் மலர்ந்து - போர் செய்யும் வில்லுடனே கெண்டைமீன் பொருந்திய தாமரைமலர்ந்து, ஒரு

† "பொழிப்பேயகல நுட்பமெச்சமெனப் பழிப்பில் பல்லுரை" — என்பதனானுமுணர்க.

இத்தமிழ் நாடகத்தமிழ் எனப்படும். என்னை, களவியொழுக்குப்படக் கோத்துக் கதைபோலவந்து நாடகத்துக்கேற்றலின். ஆயின், இலக்கணமென்று இலக்கணத்திற் கூறியவாறென்னையெனின், அந்நாடகத்தமிழ்க்கே இலக்கணங் கூறினாரென்க. இவையெல்லாம் அகலவுரைப்பாற்படும்.

ஐயம்.

ஐயம் எ-து. கண்ணுற்றதலைமகன் கொடியல்லள் பெண்ணென்றறிந்து, இங்ஙனங்காட்சியிற்சிறந்து தோன்றிய இவள் தெய்வப்பெண்களில் எத்தெய்வப்பெண்ணோ வென்று ஐயப்படுதல் கூறல்.

பாரணங் கோதிருப் பாற்கட லீன்றபங் கேருகத்தின்
ஓரணங் கோவெற் புறையணங் கோவுயர் பாவலர்க்கு
வாரணங் கோடி தருந்தஞ்சை வாணன்றென் மாறைவையை
நீரணங் கோநெஞ்ச மேதனி யேயிங்கு நின்றவரே.

இ-ள். பாரினிடத்து பொழிலின்மேலிருந்து புவியினுள்ளோர் சிறப்புச்செய்ய அச்சிறப்பைக் கொள்ளுந் தெய்வப்பெண்ணோ! திருப்பாற்கடல்பெற்ற பங்கேருகத்துக்கண் இருக்கும் ஒப்பில்லாத தெய்வப்பெண்ணோ! வரையரமகளோ! உயர்ந்த பாவலர்க்குக் கோடியானையைக் கொடுக்கும் தஞ்சைவாணனது நாட்டகத்து வரும் வையையாற்றின்கண் தோற்றிய நீரரமகளோ! நெஞ்சமே! தனியே யிங்கு நின்றவர் யாரோவென்று அறியப்படாது. எ-று.

இதனுள் ஓகாரங்கள் ஐயப்பொருளவென் றுணர்க. நெஞ்சமே! தனியே யிங்கு நின்றவர் யார்? என நெஞ்சொடு வினாதற் பொருண்மையென்று வினா ஓகாரம் என்பாரும், அவரோ இவரோ வென்று ஆராய்தற் பொருண்மைக்கண் வந்ததென்று தெரிநிலை ஓகாரம் என்பாரும் உளராலோவெனின், இக்கிளவி ஐயமாதலால் ஐயப்பொருண்மையை விளக்குவது இவ்வோகாரங்கள்; அல்லவெனின், ஐயப்பொருண்மையையுணர்த்துவதுவேறின்மைபோல், அவர் கூறிய வினா ஓகாரமும், தெரிநிலையோகாரமும் அப்பொருண்மை யறிக.

‡ "பிரிநிலை வினாவே யெதிர்மறை யொழியிசை
தெரிநிலைக் கிளவி சிறப்பொடு தொகைஇ
இருமூன் றென்ப வோகா ரம்மே"—எனச் சூத்திரத்துள்
ஐய ஓகாரங்கொண்டிலராலெனின் இச்சூத்திரத்திற் கொண்டிலர். எழுத்ததிகாரத்து உயிர்மயங்கியலில் ஓகார வீற்றுப் பதமுடிப்புழி,

---

‡ தொல். சொல், இடையியல், சூ. அ.

‡ " மாறுகொ ளெச்சமும் வினவு மையமுங்
கூறிய வல்லெழுத் தியற்கை யாகும்." — என்னுஞ் சூத்திரத்

தில் ஐய ஓகாரமுங் கொண்டார். அதற்குதாரணம், பத்தோ [illegible] றென்றே வென உரையாசிரியர் காட்டிப்போந்ததனானுங் கொள்க. பாரணங்கோ என்பதற்குச் சூர்ரமகளிரொன்று கூறினமையால் இறையனார் அகப் பொருளில்,

" உரையுறை தீந்தமிழ் வேந்த னுசிதன்றென் னாட்டொளிசேர்
விரையுறை பூம்பொழின் மேலுறை தெய்வங்கொ லன்றிவின்றோய்
வரையுறை தெய்வங்கொல் வானுறை தெய்வங்கொ னீர்மலைந்த
திரையுறை தெய்வங்கொ லேயந் தருமித் திருநுதலே." — என நுயந்

திற்குக்காட்டிய பாட்டில் பொழிலின்மேலுறை தெய்வமெனச் சூரரமக ளைக் கூறியவாறு கண்டுகொள்க. 'பங்கேருகத்தி னோரணங்கோ' என் பது மகரவீற்றுப்பதம் அந்துச்சாரியை பெற்று இன்னென்னும் ஐந்தாமுரு பு ஏழாவதின் பொருள்படவந்தது.

‡‡ " யாத னுருபிற் கூறிற் றாயினும்
பொருள்சென் மருங்கின் வேற்றுமை சாரும்." — என்னுஞ்

சூத்திரவிதியாற் கண்டுகொள்க. அன்றியும். ஊரிலிருந்தார், மனையிலிருந் தார் என்பதுபோற் கொள்ளினு மமையும்.

பொழிலைச்சார்ந்து நிற்றலின் 'பாரணங்கோ' வென்றும், இவள் இடம் பசும்பொற்றகடுவேய்ந்து மரகதவிளிம்படுத்த மாணிக்கச்சுடர் சண்பகம், பாதிரி, வகுளம், அசோகு, சந்தன முதலாய் தருக்கள் பூநாறு கொழுநிழற்கீழ் ஒரு கற்பகத்தைச்சார்ந்து பளிக்குப் [illegible] கோலக்கலாபம் விரித்து மயிலாடநோக்கி நின்றாளாகலின், இவள் நிற்கு மிடத்துச் சிறப்புநோக்கிப் 'பங்கேருகத்தி னோரணங்கோ' [illegible] என்றும், மலையிடத்து நிற்றலால் 'வரையரமகளோ' என்றும், சுனைநீ ரருகு [illegible] லின் 'நீரரமகளோ' என்றுங் கூறினானென்க.

பொழிலின்மேலிருந்து பூசைகொள்ளுந் தெய்வம் யாதோ [illegible] சூரரமகளென்ப. 'பாற்கடல்' என்ன அமையாதோ 'திரு' [illegible] றுக்கோ வெனின், கடல்களில் குணமிக்க கடலாதலானும், [illegible] தங் கொடுத்தலானும், நெடுமால் பள்ளிகொண்ட இடமாதலானும் [illegible] பாற்கடலென்று கூறப்பட்டது.

---

‡ தொல். எழுத். உயிர் மயங்கியல், சூ. அ௯.

‡‡ ஷை. சொல். வேற்றுமை மயங்கியல், சூ. உந.

இவ்வாறு தலைவியும் ஐயுறாது என்னையெனின், ஐயுறின் கந்திருவனோ! முருகவேளோ! இயக்கனோ! என ஐயுறவேண்டும். அங்ஙனம் ஐயுறவே அச்சந்தோன்றும், தோன்றவே காமவேட்கைநிகழாது, ஆதலால் கூறிற்றில வெனக் கொள்க. (உ)

துணிவு.

துணிவு எ-து. தன்னணி வாடுதல் கண்ணிமைத்தல் முதலிய குறிகளான் மானிடமாதேயென முன் ஐயுற்ற தலைமகன் தெளிந்து கூறல்.

மையார் குவளை வயற்றஞ்சை வாணனை வாழ்த்தலர்போல்
நையா தொழிமதி நன்னெஞ்ச மேயினி நம்மினுந்தன்
நெய்யார் கருங்குழற் செம்மலர் வாடின நீலவுண்கண்
கையா லழைப்பன போலிமை யாநிற்குங் காரிகைக்கே.

இ-ள். நல்ல நெஞ்சமே! இன்று இக்காரிகைக்கு நம்மினும் தனது நெய்யார்ந்த கருங்குழலில் சூடிய செம்மலர்வாடின; அன்றியும் நீலம்போன்ற மையுண்டகண் கையினால் வாவென்றழைப்பதுபோலும் இமையாநின்றன; ஆதலால், கருமைபொருந்திய குவளைமலர்ந்த வயல்சூழ்ந்த தஞ்சைவாணனை வாழ்த்தாத தெவ்வர்போல நீ நையாதொழிவாயாக. எ-று.

மதி - முன்னிலையசை. உண்கண் - மையுண்டகண். நெய்-புழுகு. ‡"நெய்யொடு குங்குமம் நிறைந்த நீரினற் - பொய்கைகள் பூம்படாம் போர்த்தல் போன்றவே." என்றார் பிறருமெனக் கொள்க. (ங)

குறிப்பறிதல்.

குறிப்பறிதல் எ-து. தலைவி வேட்கை அவள் பார்வையால் தன்னிடத் துண்டென்று குறிப்பா லறிவது.

மண்ணிற் சிறந்த புகழ்த்தஞ்சை வாணன் மலயவெற்பில்
பெண்ணிற் சிறந்தவிப் பேதைதன் பார்வை பெருவினையேன்
எண்ணிற் சிறந்த விருந்துயர் நோய்தனக் கின்மருந்தாய்
கண்ணிற் சிறந்த வுறுப்பில்லை யாவதுங் காட்டியதே.

இ-ள். மண்ணிலே மிகுந்த புகழையுடைய தஞ்சைவாணன் பொதியமலையிடத்து பெண்மையிற்சிறந்த இப்பேதை தனது பார்வை பெரியவினையேன் எண்ணத்தின் மிகுந்த பெரிய வேட்கைநோய் தனக்கு வருத்தஞ்செய்யாது இன்பஞ்செய்கின்ற மருந்துமாகி, கண்போற் சிறந்த வுறுப்பில்லையாவதுங் காட்டியது. எ-று.

---

‡ சிந்தாமணி, நாமகளிலம்பகம், கூ. ருக.

துயர் - ஆகுபெயர். வேட்கையை நோயாக்கலால் பார்வையை மருந்தாக உருவகஞ் செய்யப்பட்டது. அவயவம் பலவற்றினும் பயன்றருவ தின்மையாய்க் கண் பயன்தருவதாய்ச் சிறத்தலின், கண்போற் சிறந்த வுறுப்பில்லையாவதுங் காட்டியதென்று கூறியது.

காட்சி முதல் **குறிப்பறிதல்** ஈறாக நான்குங் கைக்கிளை யென்று கூறப்படுதலின், கைக்கிளையுள் தலைவி வேட்கைக்குறிப்பினை யறிந்தனன் என்புழி, கைக்கிளையென்பதனொடு மாறுகொள்ளும்; மற்றென்னை யெனின், மாறுகொள்ளாது. என்னை, —

தலைமகள் பார்வை பொதுப்பார்வையே, இவன் தன்னவாமிகுதியால் பார்வையில் வேட்கையுளதென்று கருதினானென்பதாயின், தலைவன் அறிவிலனாம்; மற்றென்னையெனின், தலைமகள் வேட்கைக் குறிப்பால் பார்த்தாள் என்புழி புணர்ச்சிக்கு உடன்பட்டாளாயிற்று. உடன்பட்டாள் எனவே தொல்லாசிரியர் கைக்கிளையிற் கூறார்.

மெய்ப்பாட்டியலில் தலைவிக்குக் கூறிய அவத்தையில்

முதலவத்தை.

‡ "புகுமுகம் புரிதல் பொறிநுதல் வியர்த்த
னகுநய மறைத்தல் சிதைவுபிறர்க் கின்மையொடு
தகுமுறை நான்கே யொன்றென மொழிப."

இரண்டா மவத்தை.

a‡ "கூழை விரித்தல் காதொன்று களைத
லூழணி தைவர லுடைபெயர்த் துடுத்தலோ
டூழி நான்கே யிரண்டென மொழிப."

மூன்றமவத்தை.

b‡ "அல்குல் தைவர லணிந்தவை திருத்த
லில்வலி யுறுத்த லிருகையு மெடுத்தலொடு
சொல்லிய நான்கே மூன்றென மொழிப."

நான்காமவத்தை.

c‡ "பாராட் டெடுத்தன் மடந்தப வுரைத்த
லீரமில் கூற்ற மேற்றலர் நாணல்
கொடுப்பவை கோட லுளப்படத் தொகைஇ
யெடுத்த நான்கே நான்கென மொழிப."

---

‡ தொல். பொருள். மெய்ப்பாட்டியல். சூ. ௧௩.
a‡ ஷை ஷை ஷை சூ. ௧௪.
b‡ ஷை ஷை ஷை சூ. ௧௫.
c‡ ஷை ஷை ஷை சூ. ௧௬.

ஐந்தாமவத்தை.

‡ "தெரிந்துடம் படுத றிளைப்புவினை மறுத்தல்
தேர்ந்திடத் தொழிதல் கண்டவழி யுவத்தலொடு
பொருந்திய நான்கே யைந்தென மொழிப."

இங்ஙனம் நான்கவத்தைக்கண்ணுங் கூறிய மெய்ப்பாடு பதினாறும் நிகழ்ந்ததில்லை, ஐந்தாமவத்தைக் குணநான்கினும் முதற்குணம் தெரிந்துடன்படுத லென்பதற்கு, ஆராய்ந்துடன்படுதலென்று இலக்கணங் கூறின்மையால், இவற்றி னொன்று மின்றிக் கைக்கிளையில் உடன்பட்டாளென்று சொல்லுவது பொருந்ாதென்பது. ஆயின், சான்றோர் செய்யுள் பலவற்றினுங் கைக்கிளையுட் குறிப்பறிந்தானென்று கூறியவா றென்னையெனின், அவள் பார்த்த பார்வை நன்றெனக்கோடற்கும், அன்றெனக்கோடற்கும் பொதுவேயாம். அஃதென்னையெனின், ஒருவன் பசித்து வந்தா னொருவனைக்கண்டான், அவன் பசியோடிளைத்துவந்தவன் முகத்தைப்பார்த்தான்; அப்பார்வை பசிதீர்க்குமென்பதோ தீராதென்பதோ வென்னல்போல நின்றது. பசித்துவந்தான் இவன் சோறுகொடுப்பானென றெண்ணுவ தல்லது, கொடானென வெண்ணுவதில்லை; ஆதலினானின் தன்னவாவினானென்பது. அதுபோலத் தலைமகனும் தன்னவாவையத்தனாய்க் கூறியதல்லது அறிவிலனாய்க் கூறினான் அல்லனென்றுணர்க.

இனி வேட்கையின் குறிப்புணர்ந்தது பதினான்கவி முறுவற்குறிப்புணர்தற் செய்யுளிற் கூறியவாற்றா னுணர்க. இனி இவ்வாறே அகத்திணையியலில் †"முன்னைய நான்கு முன்னதற்கு" என்னுஞ் சூத்திரத்தில் நச்சினார்க்கினியர் உரையின் அவ்வேட்கை மிகுதியாற்கூறியதல்லது உடம்பட்டாளல்லளென்று கூறியவாறுணர்க. அவளுடம்படுவ தெங்ஙன மெனின், மறுத்தெதிர் கோடலின்கண்ணே யுடம்பட்டவாறுணர்க. ஆயின், நான்கவத்தைக்கண்ணேறிய பதினாறுவகையும் நிகழாதன்றோ உடம்படுவதெனின் நிகழ்ந்தது உண்டென்றுணர்க. எங்ஙனமெனின் மெய்தொட்டுப்பயிறல் முதலிய நிகழ்ந்துழி எல்லாவகையும் நிகழ்ந்தவாறு கூறவேண்டாவாயிற்று. (௪)

கைக்கிளை - முற்றும்.

‡ தொல். பொரு. மெய்ப்பாட்டியல், சூ. கஎ.

† ஷை ஷை அகத்திணையியல், சூ. ருஉ.

இயற்கைப்புணர்ச்சி

அஃதாவது, தெய்வத்தாற் கூடுதலும், தலைவியாற் கூடுதலும் என இருவகைப்படும். செய்யுட்பாடுவார் தெய்வப்புணர்ச்சி பாடுவாருமுளர், தலைவியிற்புணர்ச்சி பாடுவாருமுளர். இவ்விரண்டிற்கும் இயற்கைப் புணர்ச்சியென்று பெயர்கூறப்படும். அவற்றுள் இச்செய்யுள் தலைவியிற்புணர்ச்சியாய இயற்கைப் புணர்ச்சியென்று கொள்க.

* "வேட்கை யுணர்த்தன் மறுத்த லுடன்படல்
கூட்டமென் றிறைவியிற் கூட்டநால் வகைத்தே." — என்னுஞ் சூத்திரவிதியால் இயற்கைப்புணர்ச்சி நான்குவகைப்படுமெனக் கொள்க. அவை வருமாறு:—

இரந்துபின்னிற்றற்கெண்ணல்.

இரந்துபின்னிற்றற்கெண்ணல் எ-து. தலைவன் தலைவியை யிரந்து பின்னிற்றற்கெண்ணல். [பின்னிற்றல் என்பது ஓர் சொல்; அதற்குப் பொருள் இதஞ்சொல்லுதல்]

தேங்கிய காதர வாதரஞ் செப்பித்தண் செப்பிணைபோல
வீங்கிய மாமுலை மேவுதும் யாம்விச யக்கொடிமேல்
வாங்கிய சாப முயர்த்தவன் போர்வென்ற வாணன்வையந்
தாங்கிய மாலனை யான்றஞ்சை சூழ்வரைத் தாழ்குழற்கே.

இ-ள். நெஞ்சமே! வெற்றிக்கொடிமேல் வளைவில்லை யுயர்த்தவனாகிய சேரனது போரைவென்ற வாணன் வையந்தாங்கிய மாலுக்கொப்பான், அவன் தஞ்சையைச் சூழ்ந்த வரையிலிருக்குந் தாழ்ந்த குழலினை யுடையாட்கு நிறைந்த அச்சந்தரும் ஆதரத்தைச்சொல்லி தண்ணிய செப்பிணை போற் பூரித்த பெரிய முலையிடத்து யாங்கூடுதும். எ-று.

காதரம் - அச்சம்; வடசொல். ஆதரம் - காதல். தாழ்குழல், அன்மொழித்தொகை. நெஞ்சம் - முன்னிலையெச்சம். (௫)

இரந்துபின் னிலைநிற்றல்

இரந்துபின் னிலைநிற்றல் எ-து. தலைவியையிரந்து இதஞ்சொல்லுதல். நிலையாகப் பின்னிற்றலென்று மாறிக்கொள்க.

செறிவேழ வெஞ்சிலை வேடஞ்சை வாணன் றிருந்தலர்மேல
எறிவேலை வென்றகண் ணென்னுயிர்க் கேவி யிருண்டறல்போல்
நெறிவே யலங்கன் முடித்தலை சாய்த்திங்ங னிற்பதுதான்
அறிவே யறிந்த வுனக்கலர் மாளிகை யாரணங்கே.

---

* அகப்பொருள்விளக்கம், களவியல், சூ. ௧௦.

இ-ள். அலர்மாளிகையிலிருக்கும் அரியதெய்வம்போல்வாய்! வென்றி செறிந்த கருப்புவெஞ்சிலையையுடைய வேளன்ன தஞ்சைவாணன் பகைவர்மேலெறிந்த வேலைவென்ற நின்கண்ணை என்னுயிர்மேலே விடுத்தலைச் செய்து, அறல்போலிருண்டு நெறிவேய்ந்த மாலையைச்சூடிய முடித்தலையைச் சாய்த்து, இவ்வாறு நிற்பது எல்லாமறிந்த உனக்கறிவோ! எ-று.

'இருண்டறல்' என்புழியும், 'அறிவேயறிந்த உனக்கும்' என்புழியும் மொழிமாற்றிக்கொள்க. 'வேடஞ்சை வாணன்' என்புழி அன்ன என்னும் பெயரெச்ச வினைக்குறிப்பாகிய உவமவுருபு தொக்கது. 'என்னுயிர்க்கேவி' என்புழி நான்கனுருபு மேல் என்னும் ஏழனுருபாயினவாறுகண்டுகொள்க. ‡"இளையரி நாணற் கிழங்கு மணற்கீன்ற" என்பதுபோலக்கொள்க. நெறி-மயிரிருபக்கமும் வகிர்ந்த நடுவொழுங்கு. முடித்தலை - இருபெயரொட்டுப் பண்புத்தொகை. ஆரணங்கு-ஆகுபெயர்; அன்னம் போல்வாளை அன்னம் என்றதுபோலக் கொள்க. (௬)

முன்னிலையாக்கல்.

முன்னிலையாக்கல் எ-து. தலைமகன் தலைமகளை முன்னிலையாக்கிக் கூறுதல். அஃதென்னையெனின்,

[காரியத்திற்கு முன்னிற்பதுயாதோ அது முன்னிலை யென்று பெயர். முன்னிலை யெனினும், முதனிலை யெனினும், காரணம் எனினும் ஒக்கும்.] ஆயின், என்சொல்லியவாறோவெனின் இவள் நிற்பது தன்காரணமாக்கிக் கூறுதல்.

வழுதியர் நாமம் வளர்க்கின்ற வாணன்றென் மாறைவண்டு
கொழுதிய லார்செய் குழன்மட வீர்நுங்குற் றேவல்செய்து
தொழுதிய லாயத் தொகுதியொ டாடிச் சுனைகுடையா
தெழுதிய பாவையைப் போனின்ற வாறென் னியம்புமினே.

இ-ள். பாண்டியருடைய புகழை வளர்க்கின்ற வாணன் தென்மாறை நாட்டுவண்டு கொழுதப்பட்ட செய்யவேண்டுமிலக்கணமெல்லாம் முற்றச்செய்த குழலையுடைய மடவீர்! நும்மிடத்துக் குற்றேவல்செய்து தொழுது சஞ்சரிக்கும் ஆயக்கூட்டத்தோடு விளையாடிச் சுனைகுடையாது எழுதிய சித்திரப்பாவைபோல, வாணன்மாறைநாட்டு நீர் நின்றவாறு யாதுகாரணம்? என்னைக் காக்கவோ? சொல்லும் இப்போழ்தே. எ-று.

'வழுதியர் நாமம் வளர்க்கின்ற வாணன்' என்பது பாண்டியனுக் கமைச்சனாதலால் என்று கொள்க. வழுதி யென்றது வழுதியர் எனப் பன்மையாற் கூறிய தென்னையெனின், வழுதிகுலத்து முன்னுள்ளோர்

படைத்த புகழும், இப்பாண்டியன்படைத்த புகழுமெல்லாம் வளர்ப்பவனுதலின் புன்மையாற் கூறப்பட்டது.

நாமம்-புகழ். தென் - அழகு; தெற்குத் திசையிலுள்ள மலையென்றுமாம். கொழுதுதல் - கோதுதல். இயல் - இலக்கணம். ஆர் - நிறைய; அர் என்னுஞ்சொல் விகாரத்தால் ஆர் என நின்றது. இயலுதல் - சஞ்சரித்தல். தொகுதி - கூட்டம். குடைதல் - குளித்தல். இன்னே - இப்பொழ்தே. 'என்னைக்காக்கவோ' என்னுஞ் சொல் வருவித்துரைக்க. இச்சொல்லுரையாவிடின் முன்னிலையாக்கற்பொருள் தோன்றாமை யுணர்க. இலக்கணமெல்லாம் முற்றச்செய்த குழல் என்றது திருமுருகாற்றுப்படையில் ‡"துவரமுடித்த துகளறுமுச்சி" என்பதற்கு முற்றமுடித்த வுச்சி - எனப் பொருள்கொண்டவாறுணர்க. (எ)

மெய்தொட்டுப்பயிறல்.

மெய்தொட்டுப்பயிறல் எ-து. தலைவன் தலைவி மெய்யினைத்தீண்டி நெருங்குதல்.

தீண்டுமா றென்னை, மெய்யைத்தொடக் கொடுக்கின் நாணிலளாம், நாணுடைய ளெனின் தொட்டலின்றாம். மற்றென்னை யெனின், நாணுமுடையள், தொட்டது முண்டு என்ன வேண்டும். எவ்வா றெனின், புனலோடும் வழி புற்சாய்ந்து புறங்கிடப்பதுபோல வேட்கைமீதூரப்பட்டு நாணம் ஒருபாற் சாய்ந்துகிடப்ப நின்றாளென்க. அக்காலத்தில் தலைவன் தீண்டற்கஞ்சி நின்று குழலில் வண்டை யோட்டுவதுபோல் நெருங்கி வண்டையோட்டுகையில் கைபட்டதுபோலத் தொட்டானென்க. அங்ஙனந் தீண்டிற் பயனென்னை யெனின், இவனுக்கு வூற்றின்பமும், தலைவிநாணத் தன்வசப்படுத்தலும் பயனென்றுணர்க. பயிறல் என்பதற்குப் பழகுதல் என்றுரைப்பாருமுளர். நெருங்கி நிற்றலால் பழகுதலுமாம். நச்சினார்க்கினியர் மெய்தொட்டுப்பயிறல் என்பதற்கு, தலையன் தீம்பால்போல மனங்கொள்ளவுங் கொள்ளாவுமாகி யிருக்கின்றகாலத்தே தொட்டானென் றுரைகூறினர். அஃதென்னை யெனின், தலையன் தொட்டானென்பதனுன் சிறிது அருவருப்பும், பாலுக்குக் குற்றமின்றென்பதனுன் விருப்புமென்று பொருள்கொள்க. அருவருப்பும் விருப்பும் இவட்கு எற்றினலாயதோவெனின், களவொழுக்கம் என்பதனுன் அருவருப்பும், கந்தருவ மணம் என்பதனுன் விருப்புமென்றும் பொருள்கொள்க. இனி செவ்வுறுப்பைத்தொட்டானெனின் தோள்தீண்டினனென்க. என்னை,—

‡ திருமுருகாற்றுப்படை, திருப்பரங்குன்றம்.

† "உறுதோ றுயிர்தளிர்ப்பத் தீண்டலாற் பேதைக்
கமிழ்தி னியன்றன தோள்." — என்பதனாற் கண்டுகொள்க.

நல்லார் விழிபோ விருந்து மளியெனு நாமம்பெற்றும்
அல்லார் குழலி லமர்ந்திருந் தாலம ராரைவெல்ல
வல்லான் வரோதயன் வாணன்றென் மாறை மதுகரங்காள்
இல்லா திடையுமக் கோபழி சால நிலைநிற்குமே.

இ-ள். பகைவரை வெல்ல வல்லமைபடைத்து வரத்தினா லுதையஞ் செய்தவனாகிய வாணனது தென்மாறைநாட்டு வண்டுகாள்! நல்லார்க்கு நீர் கண்போலிருந்தும், அன்பென்கின்ற அளியென்னும்பெயரைப்பெற்றும், இவளுடைய இருள்போன்ற குழலின்மேற் பொருந்தி இருந்தீராயின், இடை நில்லாது இறும்; அதனால் இவள் இறந்துபடும்; படின் உமக்குப் பெண்கொலைப் பாவம் மிகவும் நிலைநிற்கும்; அவ்வண்ணம் கொலைப்பாவம் வாராமல் நீங்குவீராக. எ-று.

நீங்குவீராக என்பது வருவித்துரைக்கப்பட்டது. ஏ என்பது அசை நிலை. அல்லார் என்புழி ஆர் உவமவுருபாய் நின்றது. வரோதயன் வடசொன்முடிபு. வல்லான் என்னும் வினைக்குறிப்பு முற்றுவினையெச்சமாய் நின்றது. என்னை,— ‡ திருமுருகாற்றுப்படையுள், "குழலன் கோட்டன் குறும்பல் லியத்தன்" என்பதற்கு, குழலையூதிக் கோட்டைக்குறித்துப் பல் லியத்தை யொலித்து, என முற்றுவினை யெச்சமாக நச்சினார்க்கினியர் கூறிய வுரையிற் கண்டுகொள்க. இக்கிளவிக்குச் செய்யுள் வண்டு முன்னிலையாகப் பாடவேண்டுமென்பது. (அ)

பொய்பாராட்டல்.

பொய்பாராட்டல் எ-து. தலைமகன் தலைமகள்மாட்டுள்ளதும் இல்லதுங் கூட்டிக்கொண்டாடுதல்.

ஆயின், இக்கிளவியிற் பொய்பாராட்டலென்க்கூறியதல்லது உள்ளதுமெனக்கூறியதில்லையால் இவ்வா றுரைகூறிய தென்னை யெனின், இல்லதனைக் கூறிக்கொண்டாடுவான் உள்ளதனை விடுவதிலன், மிகவுங் கொண்டாடுவான் என்பதாதலான், பொய்பாராட்டற்கு உள்ளதும் இல்லதுங் கூட்டிக்கொண்டாடுதலென * "மெய்தொட்டுப்பயிறல் பொய்பாராட்டல்" என்னுஞ் சூத்திரத்தில் உரையாசிரிய ரெழுதியவுரையிற் கண்டுகொள்க.

---

† திருக்குறள், செ. ககOசு. ‡ திருமுருகாற்றுப்படை, குன்றுதோறாடல்.
* அகப்பொருள்விளக்கம், களவியல், சூ. கக.

பருந்தொன்று கூரிலை வேற்படை வாணன் பரிமளப்பூம்
செருந்தொன்று சோலைத்தென் மாறையன் னீர்செழுந் திங்களுங்
முருந்தொன்று கோப முகங்கண்டு நாணி முயன் மறுத்திர் [கள்
மருந்தொன்று நாடியன் றோவட மேரு வலங்கொள்வதே.

இ-ள். பகைவருடலிற் றோய்ந்து அவர் ஊன்பற்றிப் புலவி நாறுத லால், பருந்து பொருந்துங் கூரிய இலைபோலும் வேலாகிய படையை யுடைய வாணனது பரிமளம்பொருந்திய பூவோடு கூடிய செருந்திமரஞ் செறிந்த சோலைசூழ்ந்த தென்மாறை நாடுபோலும் வனப்புடையவரே! நிறைந்த திங்கள் உமது முருந்துபொருந்துங் கோபமுடைய முகத்தைக் கண்டு, தன்னிடத்து முயலாகிய மறு உண்மையான் ஒவ்வாமையால் நாணி, அம்முயல்மறுத்திர்தற்கு மருந்தொன்று மனத்தில் நாடியன்றோ! வடமேரு வைத் தினம் வலங்கொள்வது. எ — று.

முருந்து - இறகின் முதன்முள்; பற்கு உவமை. கோபம் - இந்திர கோபம்; இதழ்க்குவமை. இஃதிரண்டும் ஆகுபெயர். இதனுள் இல்லது மருந்தொன்று நாடுதல்; வடமேருவலங்கொள்வது. மகளிர்க்கு உறுப்பு பல வற்றினும் முகனும் முலையுஞ்சிறந்தவுறுப்பாதலின், இவ்விரண்டினுள் ஒன்றை இக்கிளவிக்குப் பாடவேண்டு மென்பது புலவர் வழக்கு, சிறப்புடைய பொருளைத் **தானெடுத்து மொழிதல்** என்னுந் தந்திர உத்தியாதலான். (சு)

இடம்பெற்றுத்தழால்.

இடம்பெற்றுத்தழால் எ-து. தலைவி நிற்குமிடத்து அயலாயத் தெ ளருவி யாற்றங்கரையில் அசோகமரம் நிற்க, பூங்கொடி சுற்றும் படர்ந் திருக்க, மாதவிக்கொடி நின்று மலர்பூத்து வண்டுந்தேனும் பாட வரிக் குயில்கூவத் தென்றல்வீசாநிற்க, மணல்பரந்து பூந்தாது தவிசுபடுத்தாற் போற் பொலியும் அவ்விடத்தைக் காணப்பெற்று, அவ்விடத்துத் தலைவி தழுவவிரும்பிக் கூறுதல்.

இவ்வாறு விரித்துச் சிறப்பித்துக் கூறவேண்டுவ தென்னையெனின், களவிற்பகற்குறியிற் கூடுங் கூட்ட மெல்லாவற்றிற்கும் இதுவே குறியிட மாக நிற்றலினெனக்கொள்க.

படம்பட்ட வாளர வல்குலி லேதளை பட்டநெஞ்சம்
விடம்பட்ட வாள்பட்ட வேதனை தீரவிண் டோய்பொழிலும்
தடம்பட்ட வாவியுஞ் சூழ்தஞ்சை வாணன் றமிழ்க்கிரிநாம்
இடம்பட்ட வார முலைத்தடந் தோய்தற் கிடமிதுவே.

இ-ள். ஒளிபொருந்திய அரவினது படம்போ லுண்டாக்கப்பட்ட அல்குலிடத்துக் கட்டுப்பட்ட நெஞ்சமே! விடத்திலே பதப்பட்ட வாளா

ளறுக்கப்பட்ட துன்மந்திர விண்ணைத்தொட்ட பொழிலும், விரிவுபட்ட வாவியுஞ் சூழ்ந்த இஞ்சைவாணனது பொதியமலையினிடத்து நாம் மார்பெல்லாம் இடமாறக்கப்பட்ட முத்துமாலை பூண்ட முலையாகிய வாவியிற் குளித்தற்கிதுவே யிடம். எ - று.

'படம்பட்டவாளரவு' என்புழி மொழிமாற்றிக்கொள்க. **நெஞ்சம்** அண்மைவிளி. வாள்போன்றதனை வாள் என்றார்; அஃது ஆகுபெயராற் கண்டுகொள்க. **தமிழ்க்கிரி** யென்புழி கண் என்னும் உருபு தொக்கது. இதுவே யென்னும் ஏகாரம்தேற்றம். அத்தேற்றத்தினால் இடம்வேறில்லை யென்பதுணர்த்தப்பட்டது. (௧௦)

வழிபாடுமறுத்தல்.

வழிபாடுமறுத்தல் எ-து. இரந்துபின்னிலைநிற்றல் முதலாகப் பொய்பாராட்டல் ஈறாகத் தலைவன் வழிபட்டதனைத் தலைவிமறுத்தல்.

இடம்பெற்றுத் தழாலென்னுங் கிளவியில் இடங்குறித்துத் தலைவன் தன்னுடன் கூறுதலும், தலைவி தன்னியல்பான் அவன் கூறியவிடத்துக் காகதாளியம்போலச் சென்றாள் கூறக்கேட்டு இவன்சொற்படி சென்றாளல்லள், அங்ஙனஞ்சென்றாளாயின் புணர்ச்சிக் குடன்பட்டனளாம். ஆகவே, மறுத்தெதிர் கோடலோடு மாறுகொள்ளும். அன்றியும், இக்கிளவியின் பொருள் தலைவன் வழிபாட்டைத் தலைவிமறுத்தா ளென்பதாகலின், மறுத்தே கூறவேண்டுமெனப்படும். அஃதென்னையெனின், தலைவன் நெஞ்சிற் கூறியதனைத் தலைவியறியாளென் றுணர்க.

தேறாத தெவ்வென்ற வாணன்றென் மாறைச்செந் தேனருவி
ஊறாத காலத்து மூறுதண் சார லொதுக்கிடந்தந்
தாறாத சோகமு மாற்றுதல் வேண்டு மசோகமெய்தி
மாறாத தண்ணளி கூர்மலர் வாண்முக மாதவியே.

இ-ள். அசோகமரத்தைப் பொருந்தி எஞ்ஞான்றும் மாறாத தண்ணிய வண்டு செறிந்தமலரை ஒளிபொருந்தியமுகத்திலேயுடைய குருக்கத்தியே! நீயொரு காரியஞ்செய்யவேண்டும். அஃதென்னையெனின், தெளிவில்லாத பகையை வென்ற வாணனது தென்மாறை நாட்டகத்துச் செந்தேன் கலந்த அருவியாறு ஊறாத வேனிற் காலத்தும், நீ ஊறப்பட்ட குளிர்மலையினிடத் திருக்கின்றனை யாதலால், எனக் கொதுங்குமிடங் கொடுத்து இவரது ஆறாத சோகமும் ஆற்றுதல்வேண்டும். எ - று.

இவரது சோகத்தை யாற்றுந்தன்மை பெண்டன்மை யாகலின், நினக்கு அப்பெண்டன்மை சிலேடைவகையாற் றோன்றிநின்றனையென்று கூறினளென்பது. அஃதென்னையெனின், நீசோகமின்றிஅசோகமெய்தினை;

அன்றி, தண்ணளியையு முடைய மலர்போலும் [illegible]முகத்தையு முடையை; அன்றியும், மாதவியென்றொரு பெண்பெ[illegible]முடையை; ஆதலான், இவர் சோகத்தை யாற்றல் வேண்டுமென்பத[illegible]யோர் கருமஞ் செய்யவேண்டுமென வருவித் துரைக்கப்பட்டது. மாதவி[illegible]யை நோக்கி நீ செய்கென்று கூறினமையான் தலைவி மறுத்தமை தோன்றிற்று. இங்ஙனங் கூறத் தலைவன் நெருங்கிவருதலால் நாணிக்கண் புதைத்தாளென்க. இஃது இச்செய்யுளில் இல்லையாற் கூறியவாறென்னையெனின், மேல்வருங் கவியுள் கண்புதைத்து வருந்தல்கூறுகின்றாராதலான், இச்செய்யுளிற் கண்புதை கூறவேண்டுமென்றுணர்க.

தேறாத - தெளியாத. தெவ்வு - பகை. அருவியூறாதகாலம் - வேனிற்காலம். **உம்மை** - சிறப்பு. சாரல் - மலைப்பக்கம். **உம்மை**—அசைநிலை. குருக்கத்திமே லேற்றுங்கால்,—அசோகம்-ஓர்மரமாம். அளி-வண்டு. மலர்வாண்முகமாதவி - மலர்பொருந்திய முகத்தையுடைய குருக்கத்தி. பெண்மேலேற்றுங்கால்,—அசோகம் - துன்பமின்மை. தண்ணளி - அருள். மலர்வாண்முகம் - மலர்போலும் ஒளிபொருந்திய முகம். மாதவி - மாதவியென்னும்பெண். (கக)

இடையூறுகிளத்தல்.

இடையூறுகிளத்தல் எ-து. தலைவிநாணிக்கண்புதைத்ததினானெழுந்த துன்பத்தைக் கூறுதல்.

சிதையா முளரித் திருமா ளிகையிற் சிறந்ததென்றென்
இதயார விந்தத் தினிதிருப் பீரிரு கோட்டொருகை
மதயானை வாணன் வருந்தஞ்சை சூழ்வையை நாட்டுறைவோர்
புதையார் தனமென்ப தோமதர் வேற்கட் புதைத்ததுவே.

இ-ள். கேடில்லாத தாமரைத் திருமாளிகையுஞ் சிறந்ததென்று என்னிதயதாமரை வீட்டில் நன்றாக விருக்கின்றவரோ! இருகொம்பையும் ஒருகையையுங்கொண்ட மதயானையையுடைய வாணன் வரப்பட்ட தஞ்சையைச் சூழ்ந்துவரும் வையைநாட்டினுள்ளோர் தனம்படைக்கின் புதையாரென்னும் நாட்டுவழக்கமோ? தனத்தைப்புதையாது, நீ மதர்த்த வேல்போலுங் கண்ணைப்புதைத்தது. எ-று.

இவளைத் திருமகளெனப் பாவித்துக் கூறினமையான் தாமரைமாளிகை யாயிற்று. **இதயாரவிந்தம்** வடசொன் முடிபு. 'வையைநாட்டுறைவோர் தனத்தைப் புதையார்' என்றது தினந்தோறுந் தருமத்தின்பொருட்டும், புகழின்பொருட்டும் வழங்குவரென்று கூறியவாறுணர்க. ()

[illegible]டுநினைந் திரங்கல்.

நீடுநினைந் தி[illegible]-து. 'புணர்ச்சி யெய்தாமையான் இவளுள்ளம் என்னான் றி[illegible]மைகால்லோவெனக் காலநெடிதாகத் தலைவியை நோக்கி நினைந்திரங்கிக் கூறல்.

தமிழ்தங் கியதஞ்சை காவலன் வாணன் றடஞ்சிலம்பில்
குமிழ்தங் கியமதிக் கொம்பரன் னீர்குளிர் வெண்ணிலவூ
டுமிழ்தண் டாளப் பவளச்செங் கேழ்வள்ளத் துள்ளிருக்கும்
அமிழ்தந் தருவதென் றோபெரு வேட்கையென் னுருயிர்க்கே.

இ-ள். தமிழ் நிலையாய்த்தங்கிய தஞ்சைக்கு வேந்தாகிய வாணன், பெரிய மலையிடத்தில் குமிழ்தங்கிய மதியையுடைய கொம்புபோல்வீர்! பெருவேட்கைகொண்ட என்னுருயிர்க்குக் குளிர்ந்த வெள்ளிய நிலவினை உள்ளே காலப்பட்ட தண்ணிய தாளம்பொருந்திய பவளத்தினாற் செய்த சிவந்தநிறம்பொருந்திய கிண்ணத்தி னுள்ளிருக்கும் அமிழ்தம் நீர் தருவதென்னான்றோ! என்று நீடுநினைந்திரங்கிக் கூறினான். எ-று.

'குமிழ்தங்கியமதிக் கொம்பரன்னீர்' என்றது நாசிபொருந்திய முகத்தையுடைய கொம்புபோல்வீ ரென்றும், 'குளிர்வெண் ணிலவூ டுமிழ்தண்டாளம்' என்றது முறுவலென்றும், 'பவளச்செங்கேழ் வள்ளம்' என்றது வாயென்றும் பொருளைக்கூறாது உவமத்தினாற் கூறினார், ஆகுபெயரொன்னு மிலக்கணங்கொண்டென்றுணர்க. (௧௯)

மறுந்தெதிர்கோடல்.

மறுத்தெதிர்கோடல் எ-து. முன் வழிபாடு மறுத்ததனை மறுத்துத் தலைவன் கூறிய சொல்லை யேற்றுக்கோடல்.

மறுக்கோட லாமோவெனின், போரேற்றானென்றால் போரெதிர்ந் தானென்று பொருள் கூறுதல்போலுமென்றுணர்க. வழிபாடுமறுத்ததனை மறுத்தலென்றது வழிபாடுமறுத்தல் இக்கிளவியைத் தொடர்ந்தன்றே. இடையூறு கிளத்தல், நீடுநினைந்திரங்கல் என்னும் இரண்டுகிளவியும் இடையிட்டு நிற்க, வழிபாடுமறுத்ததனை மறுத்தெதிர்கோட லெங்ஙன மியையு மோவெனின் இயையும். என்னையெனின், வழிபாடு மறுத்தல் தலைவி கூற்றாகலின், அக்கூற்றுக்கு மறுத்தெதிர்கோடலும், தலைவிகூற்றாகலின் அடுத்த கூற்றாய் இயைந்தவாறு காண்க. இவ்வியையுடைமை ‡"மறைந்தவற்காண்டல்" என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்தில் கிளவிகோக்கு முறைமையில் தலைவிகூற்றெல்லாம் ஒருவகைப்படத் தொகுத்துக்கூறுமிடத்து வழி

---

‡ தொல். பொருள். களவியல், சூ. ௨௦.

பாடமேறுத்தல், மறுத்தெதிர்கோடல் எனத் தொடர்ச்சியாய்க் கூறியவா றுணர்க.

கறையா ரிலங்கிலை வேலன்பர் காமக் கடற்கெதிர்ந்த
நிறையாம் வரம்பினி நிற்பதன் றூனிறை நீருலகை
மறையாமல் வன்கலி மாற்றிய வாணன்றென் மாறையினும்
பொறையார் தவஞ்செய்தி லேநெஞ்ச மேயென் புகல்வதுவே.

இ-ள். நெஞ்சமே! குருதியார்ந்திலங்கிய இலைபோலும் வேலையுடைய அன்பரது காமக்கடல் கரைபுரண்டுவர, அக் கடற்கெதிராய் நம்முடைய நிறையாகிய வரம்பு தடுக்குமெனக் குறுகிடின் நிற்ப[illegible]ன்று. நிறைந்த நீர் சூழ்ந்த வுலகை மறைக்கவந்த வன்கலியை மறையா[illegible] [illegible]மையையுடைய வாணனது தென்மாறை நாட்டு[illegible] பொறுக்கத்தக்க நிறைதவஞ்செய்திலேம், நாமினி[illegible]

கறை - குருதி. ஆல் - அசை. கடலெழுந்து[illegible] நினைப்பார் உலகத்தில்லையென்பது குறிப்பாற் பெறப்பட்டது. [illegible] மறை; பிறரறியாமை. நிறை யெனப்படுவது மறை ; பிறரறியாமை யென் றார் பிறரும். அன்றியும்,

† "காமக் கணிச்சி யுடைக்கு நிறையென்னு
நாணுத்தாழ் வீழ்த்த கதவு." — என்று கூறியவாற்றானு முணர்க. (கச)

வறிதுநகைதோற்றல்.

வறிதுநகைதோற்றல் எ-து. தலைவி முகத்தே சிறுநகை தோற்றல். என்னை, ‡‡ "வறிதுசிறி தாகும்" என்னுஞ்சூத்திரத்தா னுணர்க. நகைதோற் றல் - நகை வெளியாய்த்தோன்றிய தென்னின் பொருந்தாது. என்னை, தலைவன்முன் நாணுடைய ளாதலின் பல்தோன்றச் சிறுமுறுவற் றோன் றலு மமையாது. அமையாதாயின், வறிது நகைதோற்றமென்னுங் கிள விப்பொருள் பொய்க்குமே யெனின், அற்றன்று †† "முகைமொக்கு ளுள ளது நாற்றம்போற் பேதை-நகைமொக்கு ளுள்ளதொன் றுண்டு." என்பத னுன் நகை வெளிதோன்று தென்பது கூறியவாறுணர்க. நகைதான் தோன்றுமாறென்னையெனின், தலைவன்சொற்கு வேட்கையா னுடன்பட்டு மகிழ்ச்சியான் முகமலர்ந்து அம்மலர்ச்சிக் குறிப்பினுன் நகையெனத் தோற் றுவித்தவா றுணர்க.

---

† திருக்குறள், செ. ௧௨௫௧. ‡‡ தொல். சொல். உரியியல், சூ. ௪௦.
†† ஷ டி செ. ௧௨௭௪.

எறிதே னலம்புஞ் சிலம்பினெப் போது மிரங்கிவள்பின்
வெறிதே திரிந்து மெலிந்தன நாமுள்ள மெல்லியற்குப்
பிறிதேகொ லென்னும் பெருந்தகை தேறப் பெரிதுயிர்த்து
வறிதே முறுவல்செய் தாடஞ்சை வாணன் வரையணங்கே.

இ-ள். இறகாற் காற்றை யெறியும் வண்டுகள் எப்போதும் ஆரவாரிக்குஞ் சிலம்பிடத்தில் குறையிறந்து இவள்பின்னே பயனின்றியே திரிதலைச்செய்து நாம் மெலிந்தனம்; இம் மெல்லியற்கு உள்ளம் வேறென்று சொல்லும் பெருந்தகை தேறுமாறு பெரிதாய நெட்டுயிர்ப்பெறிந்து தஞ்சை வாணன் வரையணங்குபோல்வாள் வறிதே முறுவல்செய்தாள். எ - று.

எறிதேன் என்பது ஒற்றுமை நயத்தால் சினைவினை முதன்மே னின்றது. அலம்பல் - ஆரவாரித்தல். **எப்போதும்** என்பதனை வண்டுகளோடு கூட்டுக. **பெரிதுயிர்த்தல்** எற்றுக்கோவெனின், நிறையால் தடுக்கரிதாயிற்றென்னும் எண்ணத்தினால் நெட்டுயிர்ப்புத் தோன்றிற்றெனக்கொள்க.

இக்கவி யார் கூற்றெனின், உரைப்பாருங் கேட்பாரு மின்மையான் கவிக்கூற்றென்று கொள்க. அகப்பாட்டுறுப்புப் பன்னிரண்டினும் துறையென்னும் உறுப்பு இக்கவியெனக்கொள்க. தலைவன்கூற்றாய்க் கூறாது கவிக்கூற்றாய்க் கூறவேண்டுவ தென்னை யெனின், இது தலைவன் கூற்றாயின் மேல் முறுவற்குறிப் புணர்தலென்னும் தலைவன் கூற்றுத் தோன்றாதாகலான் இது கவிக்கூற்றாயிற்று. (௧௫)

முறுவற்குறிப்புணர்தல்.

முறுவற்குறிப்புணர்தல் எ-து. அம்முறுவலின் குறிப்பைத் தலைமகனுணர்தல்.

வின்மலை வேலன்ன நன்னுதல் வாட்கண்ணி வேட்கையெண்ணாள்
என்மலை வேனென்னு மென்னுயிர் தாங்கு மெதிர்ந்தவொன்னார்
மன்மலை வேழந் திறைகொண்ட சேய்தஞ்சை வாணன்மஞ்சார்
தென்மலை வேய்நிக ரும்பெருந் தோளி சிறுநகையே

இ-ள். போரிலெதிர்ந்த பகைவரது நிலைபெற்ற மலைபோன்ற யானையைத் திறையாகக்கொண்ட முருகவேளை யொக்குந் தஞ்சை வாணனது முகிலார்ந்த பொதியமலையிலெழுந்த வேயைநிகரும் பெரிய தோளினையுடையாளது சிறியநகையானது, வில்லும் பொருகின்ற வேலும் போன்ற நன்னுதலும் வாட்கண்ணுமுடையாள் எனது வேட்கையினை யெண்ணாளாயின், நான் இனி யாதுசெய்வேனென்னும் என்னுயிரைத் தாங்காநிற்கும். எ - று.

'வின்மலைவேல்' என்புழியும், 'நன்னுதல் வாட்கண்ணி' என்புழியும் உம்மைத்தொகை நிரனிறை. மலைவேல்-பொருவேல். என்மலைவேன்-யாது செய்வேன். மலைவேழம் - உவமைத்தொகை. என்னுயிர் தாங்காநிற்கு மென்பதனால், தலைவிவேட்கைக்குறிப்பை முறுவலினா னுணர்ந்தானென்று கொள்க. கைக்கிளையிற் 'குறிப்பறிதல்' என்பது தன்னவாவினாற் கூறிய தல்லது வேட்கைக்குறிப்பு நிகழ்ந்ததன்றென்பது இக்கிளவியாற்றெளியப் பட்டதென்றுணர்க. (கசு)

முயங்குத லுறுத்தல்.

முயங்குதலுறுத்தல் எ-து. தலைவி முயங்குதற்கு உடன்பட்ட அருமையை வலியுறுத்திக் கூறுதல்.

வானக் கதிரவன் மண்ணக மாதை மணந்ததன்றோ
நானக் குழலியை நானின்று பெற்றது நாவலர்க்குத்
தானக் களிறு தரும்புயல் வாணன் றமிழ்த்தஞ்சைசூழ்
கானக் கடிவரை வாய்விரை நாண்மலர்க் காவகத்தே.

இ - ள். நாவலர்க்கு மதம்பொழியும் யானையைக் கொடுக்கும் புயல் போன்ற வாணனது தஞ்சைசூழ்ந்த காமிகுந்தவரையிடத்து, மணநாறும் நாட்கொண்ட மலர்செறிந்த சோலையிடத்து, மான்மதமார்ந்த குழலினை யுடையாளை நான் இன்று முயங்கப்பெற்ற அருமை, வானத்தை யிடமாக வுடைய ஆதித்தன் மண்ணிடத்து மாதைவந்து கூடியதாம். எ - று.

வானம் - ஆகாயம். நானம் - மான்மதம். தானம் - மதம். புயல் வாணன் - உவமைத்தொகை. கானம் - காடு. கடி - மிகுதி. நாண்மலர் - முறுக்கவிழ்மலர். அன்றே என்னும் ஓகாரம் எதிர்மறை. 'நானின்றுபெற்றது' என இறந்தகாலத்தாற்கூறியது, கூடும் விரைவுபற்றியெனக்கொள்க. என்னை,—

‡ "வாராக் காலத்து நிகழுங் காலத்து
மோராங்கு வரூஉம் வினைச்சொற் கிளவி
யிறந்தகா லத்துக் குறிப்பொடு கிளத்தல்
விரைந்த பொருள வென்மனார் புலவர்." — என்னுஞ் சூத்திர

விதியாற் கண்டுகொள்க. (கஎ)

புணர்ச்சியின்மகிழ்தல்.

புணர்ச்சியின் மகிழ்தல் எ-து. தலைவன் புணர்ச்சியான் மகிழ்தல்.

---

‡ தொல். சொல். வினையியல், சூ சுசு.

களுஞ் சூழ்ந்த தஞ்சைவாணனது தென்மாறைநாட்டு வயலிடத்துண்டா கிய நீலப்போதுங் கயலுங் கமலப்போதும் ஒப்புக்காட்டுமெ நினது கண்மல ரும், நினது ஆவியும்போன்ற தோழிமாரணிந்த அணியாக வணிந்தனனாத லால். எ - று.

நாவி - மான்மதம். புழுகு - புழுகு. தோய்குழல் - ஆகுபெயர். தாழ் குழல் என்பதுபோல அன்மொழித்தொகை யாகாவோ வெனின், ஆகா. என்னை, தாழ்குழல் என்பது வினைத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொ ழித்தொகை. தோய்குழல் அவ்வண்ண மாகாது மற்றுமோர் சொல்லை [illegible]

இனியார் - ஈண்டுத் தோழிமார். (உ௦)

பெருநயப்புரைத்தல்.

பெருநயப்புரைத்தல் எ - து. மீண்டும் இவன் வருவன்கொல்லோ! வாரான்கொல்லோ! வென்றெண்ணி முகம்வேறுபட்டாளாக, அவ்வேறு பாட்டைத் தலைவன் குறிப்பானுணர்ந்து தனது மிகுந்தகாதலை யுரைத்தல்.

மன்னு வுலகத்து மன்னிய சீர்த்தஞ்சை வாணன்வெற்பில்
என்னுயி யன்ன விவளிடை மேலிணை கொண்டெழுந்த [டோ
பொன்னு ணணிகொங்கை போலவண் டீருங்கள் பொய்கையுண்
நன்னு ளரும்பொரு தாளிரண் டீனு நளினங்களே.

இ - ள். நிலையில்லாத உலகத்தினிடத்து நிலைபெற்ற கீர்த்தியையுடைய தஞ்சைவாணனது வெற்பிடத்து வண்டுகாள்! என்னுயிரையொத்த இவ ளிடைமேல் இரண்டென்னும் எண்ணைக்கொண்டெழுந்த பொன்னுனெ ன்னும் பூணையணிந்த கொங்கைபோல, நல்லநாட்கொண்ட அரும்புகள் ஒருதாள் இரண்டீனுந் தாமரைகளை உங்கள் பொய்கைக்கண் கண்டதுண் டோ? எ - று.

வண்டுகாள்! நீர் எவ்விடத்து வாவிகளினுஞ் சென்று எல்லாப் பூக்க ளையுங்கண் டறிதிரன்றே? அவ்வாவிகளில் ஒருதாள் இரண்டரும்பீனுந் தாமரையைக் கண்டதுண்டேல் சொல்லுவீராகவென்று கூறியது, வயி ற்றுரோமரேகை ஒரு தாளாகவும், முலையிரண்டும் அத்தாளிலே பிறந்த அரும்பாகவும், தன் காதலாற் றோன்றியதென்று தன்னயப்புரைத்தவா றுணர்க. அன்றியும், ' என்னுயியன்ன விவள்' என்பதனான் இவள் நீங்கும் போதில் உயிர்நீங்கும், உடம்பாகுவேன் என்பது தோன்றலானும், தன் னயப்புணர்த்தியவா றுணர்க.

சீர் - சீர்த்தி. பொய்கையுண்டோ என்புழி எழனுருபு தொக்கு நின்றது. 'வெறபுகத்து வண்டீர்'-எனக்கூட்டுக. இக்கிளவிக்குஞ் செய்யுளை வண்டு முன்னிலை யாகப்பாடவேண்டுமென்பது. (உக)

தெய்வந்திறம்பேசல்.

தெய்வத்திறம்பேசல் எ-து. இங்ஙனங் கூறியுந் தெளிந்திலளால் ஊழ்வலியினது திறத்தைக் கூறல்.

மன்னிய பார்புகழ் வாணன்றென் மாறையின் மாந்தளிர்போல்
மின்னிய மாமை விளர்ப்பதென் னேவிதி கூட்டநம்மில்
பின்னிய காதற் பிரிப்பவர் யாரினிப் பேரருவி
இன்னிய மாக விளமயி லாடு மிரும்பொழிற்கே.

இ - ள். பாரிடத்து நிலைபெற்ற புகழையுடைய வாணனது தென்மாறைவெற்பில் வரும் பேரருவி தண்ணுமையாக இளமயிலாடும் இப்பெரிய சோலையிடத்து, இன்று மாந்தளிர்போல் ஒளிவிடப்பட்ட அழகை விளர்த்துக் காட்டுவதென்னே? விதியானது கூட்டுவிக்க நம்முட்பிணித்த காதலைப் பிரிப்பவர் யார்? ஆதலால், நீ ஐயுறேல். எ - று.

'அருவியின்னியமாக விளமயிலாடும்' என்பதனான் வெற்பு வருவிக்கப்பட்டது. 'பார்மன்னிய' என இயையும். மாமை-அழகு; நிறமுமாம்.

† "தம்மி விருந்து தமதுபாத் துண்டற்றா
லம்மா வரிவை முயக்கு." —என்னுங் குறளில் அம்மா அரிவை என்பதற்கு அழகிய மாமைநிறத்தையுடைய அரிவையென்று பரிமேலழகர் எழுதிய வுரையாற் கண்டுகொள்க.

விளர்த்தல் - மனக்கவற்சியால் வெளுத்தல். விதி - ஊழ்வினை. பின்னிய - பிணித்த. இனி-இன்று. இன்னியம்-ஈண்டுத்தண்ணுமை. இருமை-பெருமை. பொழிற்கே என்புழி வேற்றுமைமயக்கம். ஏகாரமிரண்டும் ஈற்றசை. தலைவி-முன்னிலையெச்சம். (உஉ)

பிரியேனென்றல்.

பிரியேனென்றல் எ-து நீர்க்கரைப்பசுங்கொடி வேனில்வெப்பத்தால் நிறம் வேறுபடல்போல, புணர்ச்சியின்பத்தாற் பெற்றவழகு எம்பெருமான் பிரிவென்னுங் கவற்சியால் விளர்த்த வெளுப்பு நீங்காமைகண்ட தலைமகன் நின்னிற் பிரியேனென்று வற்புறுத்திக் கூறல்.

---

† திருக்குறள், சே. ௧௧0௭.

வண்கொடி யேய்மதின் மாறைவ ரோதயன் வாணனென்னார்
எண்கொடி யேனெய்த விவ்வண்ண நீயிரங் கேலிரங்கேல்
நுண்கொடி யேரிடை வண்டிமிர் பூங்குழ னூபுரத்தாள்
பெண்கொடி யேபிரி யேன்றரி யேனிற் பிரியினுமே.

இ - ள். கொடுக்குங் கொடையாற் கட்டிய கொடிபொருந்திய மதில் சூழ்ந்த மாறைநாட்டில், வரத்தினு னுதையஞ்செய்த வாணனுக்குப் பகைவராயுள்ளா ரெய்து மெண்ணத்தைக் கொடியேனாகிய யான் எய்த நினைக்கின், விளர்ப்புவண்ணமாக நீ யிரங்கற்க விரங்கற்க ; நுண்ணிய கொடிபோலழகையுடைய இடையையும், வண்டுகளிமிரும் பூவணிந்த குழலையும், பரிபுரமணிந்த தாளையுமுடைய பெண்கொடியே ! நின்னிற் பிரியேன் ; அன்றிப் பிரியினுங் கணப்போதுந் தரியேனென்று அணங்கின்முன்னே கூறினான்.

வண்மைக்கோடி - வண்கொடியென நின்றது. நன்மைநெறி - நன்னெறியென நின்றாற்போல வண்மை, நன்மை யென்பன பண்புப்பதமாகலின், ஈற்றுயிர் மெய்கெடுதல் அப்பதத்திற் கியல்பெனக்கொள்க. வண்மை - கொடை. எய்தல் - பொருந்துதல். 'வாணனென்னார்' என்பது,

‡ "அதுவென் வேற்றுமை யுயர்திணைத் தொகைவயி
னதுவெ னுருபுகெடக் குகரம் வருமே."—என்னும் வேற்றுமை

மயங்கியற் சூத்திரத்தால், அது என்னும் ஆறனுருபு 'வாணனுக்கு ஒன்னார்' என நான்கனுருபாகப் பொருள்கொள்க.

எண் - எண்ணம். இவ்வண்ணம் என்புழி சுட்டு முற்கவியில் 'விளர்ப்பதென்னே' என்று கூறினமையான் அவ்விளர்ப்பு வண்ணத்தைச் சுட்டிற்று. 'இரங்கே லிரங்கேல்' என்றது அடுக்குமொழி. என்னையெனின்,—

"கொல்லல் கொல்லல் செய்நலங் கொல்ல லெஞ்ஞான்றுஞ்
சொல்லல் சொல்லல் பொய்ம்மொழி சொல்ல லெஞ்ஞான்றும்
புல்லல் புல்லல் தீநெறி புல்ல லெஞ்ஞான்றும்." — என்னும்

இம்மூவடி வெளிவிருத்தத்துள் அடிதோறும் அச்சப்பொருண்மைக்கண் வினாவுபற்றி அடுக்குமொழி வந்தவாறுபோலக் கொள்க. ஏர் - அழகு. இமிர்தல்-முரலுதல். என்னை, —

‡‡ "வேங்கை தொலைத்த வெறிபொறி வாரணத்
தேந்து மருப்பி னினவண் டிமிர்பூதும்" — என்னுங் குறிஞ்சிக்

கலியுள், இமிர்தல் வண்டொலிக்கு வந்தவாறு கண்டுகொள்க.

'நுண்கொடியேரிடை' உவமைத்தொகை. 'நுண்கொடி யேரிடை வண்டிமிர் பூங்குழ னூபுரத்தாள்' என்புழி உம்மைத்தொகை. 'பிரியேன்'

---

‡ தொல். சொல். வேற்றுமைமயங்கியல், சூ. ௧௧.

‡‡ கலித்தொகை, குறிஞ்சிக்கலி, செ. ௭,

இ - ள். மேற்சென்று பகையைவென்ற இன்னிய சேனையையுடைய வாணனது வளவிய தஞ்சையைச் சூழ்ந்துவந்து நன்மை தரப்பட்ட வையைநாடு போன்றவளே! யான் ஒருசொல் சொல்லுகின்றேன், அது கேட்பாயாக; நம்மிருவர்க்கும் அரியவுயி ரொன்றாயதுபோல் என்சொல்லும் ஒன்றே; யாதெனின், உவ்விடத்துயர்ந்த சோலையினுள் ஒளித்து நின்று வருவேன், இவ்விடத்து நீ சிறிதுபோது விளையாடுக. எ - று.

'சென்றே பகைவென்ற' என்றது வஞ்சித்திணைப்பொருள்; அது மேற்சென்று பகைபொருதல்.

"வெட்சி நிரைகவர்தல் மீட்டல் கரந்தையாம்
வட்கார்மேற் செல்வது வஞ்சியாம் — உட்கா
தெதிரூன்றல் காஞ்சி யெயில்வளைத்த லுழிஞை
யதுவளைத்த லாகு முழிஞை." — என்னும் வெண்பா மாலையானும்,

‡ "வஞ்சி தானே முல்லையது புறனே." —

‡‡ "எஞ்சா மண்ணசை வேந்தனை வேந்த
னஞ்சுதகத் தலைச்சென் றடல்குறித் தன்றே." — என்னுஞ் சூத்திரங்களானும், பகைவேந்தனை வேந்தன் மேற்சென்றுபொருவது வஞ்சித்திணை. மேற்சேறலெனினும், தலைச்சேறலெனினும் ஒக்குமாதலான், 'சென்றே பகைவென்ற இன்னிடைவாணன்' என்றார்.

நன்று - நன்மை. ஆருயிர் - அரிய வுயிர். ஊங்கு - சுட்டுநீண்டது.

'சிறிது' என்றது காலத்தின்மே னின்றது. காலத்திற்சிறிது கணமாதலின் கணப்போது விளையாடுகவென்றவாறாயிற்று. ஆயின், இங்ஙனம் பிரியின், இவன் அன்பிலனும், தலைவியாற்றாளாம்; மற்றென்னை பிரிந்தவாறெனின், பிரியாவிடின் களவு பிறர்க்குப் புலனாம்; புலனாகவே, இவள் பெருநாணின ளாதலால் இறந்துபடுமாதலின், பிரியவேண்டுமென்று கருதிப் பிரிந்தானென்பது. தலைமகள் பிரிவுக்கு இயைந்தாற்றுமோ வெனின், ஆற்றும். எங்ஙனமெனின், ஆற்றாமையான் இறந்துபட்டுழி எம்பெருமானும் இறந்துபடுமென்று கருதிப் பிரிவினை ஆற்றல் வேண்டுமென்று ஆற்றினளாம். (௨௯)

இடமணித்தென்றல்.

இடமணித்தென்றல் எ - து. தலைவனூர் சேய்த்தோ அணித்தோ என்று தலைமகள் கவலைப்பட்ட வதனைக் குறிப்பினாலறிந்த தலைவன் இடம் அணித்தென்று கூறுதல்.

---

‡ தொல். பொருள். புறத்திணையியல், சூ. ௬.

‡‡ ஷை ஷை ஷை சூ ௭.

மணிபொன் சொரியுங்கை வாணன்றென் மாறை மருவினர்போல்
தணிபொன் சொரியுந் தடமுலை யாயுயர் சந்தமுந்தி
அணிபொன் சொரியு மருவியெஞ் சார லகத்தவர்தேங்
கணிபொன் சொரியுநின் சாரன்மென் காந்தளங் கையகத்தே.

இ - ள். எற்றோர்க்கு மணியும் பொன்னுஞ் சொரியப்பட்ட கையையுடைய வாணனது தென்மாறை நாட்டின்கண் உறைவார்போல, தணிவாகப் பொன்போற் பசலைநிறத்தைச்சொரியும் பெரியமுலையாய்! நீ இங்ஙனம் ஆற்றாமை கொள்ளவேண்டாம்; நின்னூர்க் கெம்மூர் செய்த்தன்று, அணித்தாயிருக்கும்; எங்ஙன மெனின், உயர்ந்த சந்தனத் தருக்களைத் திரையாலெறிந்து அணியணியாகப் பொன்னைச்சொரியும் அருவிபொருந்திய எஞ்சாரலகத்துத் தேனொடுகூடிய வேங்கை நின் சாரலிடத்திருக்கும் மெல்லிய காந்தட்போதாகிய கையிடத்திலே பொன்போல் அலரைச் சொரியும். எ - று.

'சந்த முந்தி அணிபொன்சொரியு மருவி' என்றதனால் திரை வருவிக்கப்பட்டது. 'மணிபொன்' என்புழி உம்மைத்தொகை. தணிதல்-நிறைதல். உந்தல் - எறிதல். 'பொன்போ லலரைச்சொரியும்' என மொழிமாற்றிக் கொள்க. ஆதலான், என்சாரலும் நின்சாரலும் அணித்தென்றவா றாயிற்று. என்சாரல் வேங்கைத் தருவால் நின்சாரற் காந்தள் பயன்பெற்றாற்போல, என்னால் நீயும் நீங்காது பயன்பெறுவையென உள்ளுறையுவமம் தோன்றியவாறுணர்க. இவ்வாறு இடமணித்தென்று கூறித் தலைவனீங்கும். எவ்விடத்து நீங்குமோவெனின், தலைவியாற்றுவாள் கொல்லோ, ஆற்றாள்கொல்லோ வென்பது அறிதுமென்று தலைவி காணாததோரணிமைக்கண் தான் மறைந்திருந்து தலைவியை நோக்கி யிருக்குமெனக்கொள்க. முன்னைய மூன்றும் 'ஐயந்தீர்த்தல்,' பின்னைய மூன்றும் 'பிரிவறிவுறுத்தல்' என்க. ()

வன்புறை - முற்றும்.

தெளிவு.

அஃதாவது, *" தலைவன் மாற்றந் தலைவி தேற்றல்-தெளிவா மென்பர் தெளிந்திசி னோரே."— என்னுஞ் சூத்திரவிதியால் தலைவன்கூறிய சொல்லைத் தலைவி மெய்யெனத் தெளிந்தாற்றுவது.

எத்துந் தமதுளா தேறிநின் றேனையிங் கேதனியே
வைத்தங் ககன்று மறைந்துறை யார்வறி யோர்கவர
முத்துந் துகிரு மிரங்குந் தரங்க முகந்தெறிந்து
தத்துங் கரைவையை சூழ்தஞ்சை வாணன் றமிழ்வெற்பரே.

* அகப்பொருள்விளக்கம், களவியல், சூ. ௧௪.

இ - ள். எத்திறத்துந்தரியேம் நிற்பிரியினுமென்று கூறிய தமதுரையை மெய்யாகத் தேறிநின்றேனை இவ்விடத்துத் தனியாகவைத்து, அவ்விடத்து நம்மை மறந்து தரித்திரார், வறியோர் கவர முத்தையும் பவளத்தையும் ஒலிக்குந் திரையாகிய கையினுன் மொண்டு வீசித் தத்துந் தரங்கமொருந் திய வையை சூழ்ந்த தமிழ்வெற்பர். எ - று.

வறியோர் கவர முத்துந் துகிருந் திரைக்கையாலே முகந்தெறிகின்ற அருளுடைய வையைநதி சூழ்ந்த நாட்டுவெற்பராதலான், இவரும் அருளுடையாராய் நம்மைத் தனியே இங்குவைத்து அங்ககன்று உறையாரென்பது தோன்றி நின்றது.

எத்தும் - எத்திறத்தும். 'அகன்றங்கு' என்று இயையும். துகிர் - பவளம். இரங்குதல் - ஒலித்தல். தரங்கம் - அலை. தத்தல் - தாவல். (௨௬)

தெளிவு - முற்றும்.

பிரிவுழி மகிழ்ச்சி.

அஃதாவது, தலைவிபிரிந்து போகுழிப் போகின்ற தன்மையைக்கண்டு தலைவன் மகிழ்தல்.

செல்லுங்கிழத்தி செலவுகண் டுளத்தொடு சொல்லல்.

செல்லுங்கிழத்தி செலவுகண் டுளத்தொடுசொல்லல் எ - து. தலைவன் புணர்ச்சிக்களத்தினின்றும் பெயர்ந்து போகாநின்ற தலைமகளது செலவைக்கண்டு தன் நெஞ்சத்தொடு சொல்லுதல்.

அகிலேந்து கூந்த லொருகையி லேந்தி யசைந்தொருகை
துகிலேந்தி யேந்துந் துணைச்சிலம் பார்ப்பத் துளிகலந்த
முகிலேந்து பூம்பொழில் சூழ்தஞ்சை வாணன்முந் நீர்த்துறைவாய்
நகிலேந்து பூங்கொடி போற்செல்லு மாநெஞ்ச நம்முயிரே.

இ - ள். நெஞ்சமே! நம்முயிராயதோர் வடிவு கொண்டு அகிற்புகையேந்திய கூந்தலை யொருகையி லேந்திக்கொண்டு, ஒருகையிற் றுகிலையேந்திக்கொண்டு அசைந்து, தாளிணையேந்துந் துணைச்சிலம்பு ஆரவாரிக்கத் துளிகலந்த முகிலையேந்திய பூவொடுகூடிய பொழில்சூழ்ந்த தஞ்சைவாணனது கடற்கரையிடத்து, முலையை யேந்த பூங்கொடி நடந்து செல்லல் போற் செல்லும், நீ காண்பாயாக. எ - று.

கூந்தல் முடியாமலும் துகிலுடாமலும் வந்த தென்னையெனின், புணர்ச்சிக்களத்து இருப்புழி ஆயக்கூட்டத்தார் வருவாரென்றும், வந்தால் களவு புலனாமென்றுங் கருதி, அவ்விடத்து நீங்கிக் குழல்முடிக்கவும் துகிலுடுக்கவும் நினைத்து வந்தாளென்க. அநில் - ஆகுபெயர். துகில் - புடவை. துளி - தண்ணீர். நகில் - முலை. நேர்சம் - அண்மைவிளி. ஆல்-அசை. 'காண்பாய்' என்னுஞ்சொல் எச்சமாய் நின்று முடிந்தது. (உஎ)

பாகனோடு சொல்லல்.

பாகனொடு சொல்லல் எ - து. தலைவன் தன்னைத் தேடிவந்த பாகனொடு தலைவி செல்வதைக்காட்டிக் கூறல்.

தென்பாற் றிலகமன் னன்றஞ்சை வாணன்றென் மாறைமுந்நீர்
வன்பாற் றிரண்முத்த வண்டலின் மேல்வரு மேதமஞ்சி
முன்பார்த்தென் னெஞ்சம் வரும்வழி பார்த்து முறைமுறையே
பின்பார்த் தொதுங்குதல் காண்வல வாவொரு பெண்ணணங்கே.

இ - ள். வலவா! ஒரு பெண்ணணங்கு தென்றிசைக்குத் திலகம் போன்றவனாகிய தஞ்சைவாணனது தென்மாறைநாட்டுக் கடற்கரையில் வலியபாற்றிரள்போன்ற முத்தத்தினான் வண்டலம்பாவைசெய்து விளையாடும் ஆயக்கூட்டத்தார் மேலாகவருங் குற்றமஞ்சி முன்னே பார்த்து, நெஞ்சம்வருகிற வழியை முறைமுறையாய் இருபக்கமும் பார்த்து, யான் வருகின்றேனோ வென்று பின்பார்த்து நடந்தேகல் காண்பாயாக. எ - று.

'பாற்றிரண்முத்தம்' என்புழி உவமைத்தொகை. வண்டலின் மேல் வருமேதம் - ஆயக்கூட்டத்தார் தான்வருகின்ற கோலங் கண்டு ஐயுறுவாரென்னுங் குற்றம்.

வலவன் - தேர்ப்பாகன். 'பெண்ணணங்கு' என்றது பின்மொழி நிலையல். 'அணங்குபோலும்பெண்' என்று பொருள் கூறுக; இதனை முன்மொழி நிலையல் என்பாருமுளர். (உஅ)

பிரிவுழிமகிழ்ச்சி - முற்றும்.

பிரிவுழிக்கலங்கல்.

அஃதாவது, தலைவிபிரிந்தவிடத்தில் தலைவன் கலங்கிக் கூறல்.

* "மருளுற் றுணாத்த றெருளுற் றுணாத்தலென்
றிருவகைத் தாகும் பிரிவுழிக் கலங்கல்." — என்னுஞ் சூத்திர விதியால் பிரிவுழிக்கலங்கல் இரண்டுவகையாகும்.

---

* அகப்பொருள்விளக்கம், களவியல். சூ. ௧௯.

ஆயவெள்ளம் வழிபடக்கண்டு இது மாயமோவென்றல்.

ஆயவெள்ளம் வழிபடக் கண்டு இது மாயமோ வென்றல் எ - து. தலைவியை ஆயக்கூட்டம்வந்து வழிபடுதலைக்கண்டு, இவ்வாயத்துள்ளாள் என்னைத் தனித்துக்கூடியது என்னமாயமோ வென்று மயங்கிக்கூறுதல்.

சீயங்கொ லோவெனத் தெவ்வென்ற வாணன்றென் மாறைவையை
தோயங்கொ லோவெனு நேயநம் பால்வைத்துச் சோலைமஞ்ஞை[த்
ஆயங்கொ லோவெனு மாயத்துள் ளாளிவ் வரிவையென்ன
மாயங்கொ லோநெஞ்ச மேமணம் போலிங்கு வந்துற்றதே.

இ - ள். நெஞ்சமே! தெவ்வர்போர்க்களத்திற் பொரும்போது இவன் சிங்கமோ வென்று சொல்லும்படி வெற்றியடைந்த வாணனது தென் மாறைநாட்டில் வரும் வையையாற்றினது நீரோவென்று சொல்லப்பட்ட அன்பை நம்மிடத்திலேவைத்து, சோலையிடத்துலாவும் மயிற்கூட்டமோ வென ஐயங்கொடுக்கும் இவ்வாயக்கூட்டம் வழிபட நடுவே விளங்குகின் றுளாகிய இவ்வரிவை மணஞ்செய்ததுபோல இங்குவந்து கூடியது யாது மாயமோ! எ - று.

சீயம் - சிங்கம். தெவ்வு - பகை. தோயம் - நீர். நேயம் - அ[illegible] மஞ்ஞை - மயில். கொல் நான்கும் ஐயம். ஓகாரம் நான்கும் [illegible] நிலை. அன்றி, ஓகாரம் ஐயமெனின், கொல் - அசைநிலை.

இங்ஙனம் தலைவிகாணுததோர் ரணிமைக்கண் நின்ற தலைமகன் ஆயக் கூட்டத்தில் தலைவிசேர்ந்தவுடன், அவர் குறுங்கண்ணியும் செங்கோதை யும் தளிருங்கொண்டுவந்து வழிபடுவாரும், குற்றேவல்செய்வாரும், பல் லாண்டுகூறுவாருமாய்ச் சூழ, தாரகை நடுவண் தண்மதிபோல இவள் வீற் றிருப்புதைக்கண்டு கூறியவாறென் றுணர்க. (௨௬)

வாயில்பெற்றுய்தல்.

வாயில்பெற்றுய்தல் எ-து. தலைவி ஆயக்கூட்டத்திற் செல்லும்போது உயிர்ப்பாங்கி முகத்தை நோக்கிச் செல்ல அறிந்து அவ்வுயிர்ப்பாங்கியைத் தலைவன் தூதாகப்பெற்று உய்வதாகக் கூறல். வாயில் எனினும், தூது எனினும் ஒக்கும். பக்கத்திற் பிரியாதிருத்தலான் பாங்கி யென்று பெயரா யிற்று.

இடந்தலைப்பாடும், பாங்கற்கூட்டமுங் கூறி, மதியுடம்பாட்டில் அறி யும் பாங்கியை ஈண்டறிந்ததாகக் கூறவேண்டிய தென்னையெனின், மதி யுடம்பாட்டில் வாயில்பெற்று இரவுவலியுறுத்திக் கண்ணியுந் தழையும் ஏந் திச் சென்று ஊர் பெயர் முதலிய வினவுழிப் பாங்கியை யறிதற்கெனக்

கொள்க. ஈண்டறியிரவிடின், இடந்தலைப்பாடு பாங்கற்கூட்டத்தில் அறியுமிடமின்று. ஆதலான், இவ்வாயில்பெற் றுய்தற்கும், அவ்வாயில்பெற்று இரவுவலியுறுத்தற்கும் மாட்டேற்றுப் பூட்டென்றுணர்க.

பெருமான் மருந்தொன்று பெற்றனம் யானெஞ்சம் பேதுறல்பார்
மருமான் வரோதயன் வாணன்றென் மாறை மணங்கமழ்பூந்
திருமான் முகமலர்ச் சேயரி பாய்கயல் சென்றுசென்றவ்
வொருமா னகைமுக மாமல ரோடை யுலாவருமே.

இ - ள். நெஞ்சமே! பாரின்வழித் தோன்றி வரத்துதித்தவனாகிய வாணனது தென்மாறைநாட்டு மணநாறும் பூவிலிருக்கப்பட்ட திருமகள் போன்ற தலைவியது முகமலரின்கணுள்ள செவ்வரிபரந்த கயல்போன்ற கண்கள் போய்ப் போய்ப் பாங்கியது ஒளிபொருந்திய முகமாகிய மலரோடையுள் உலாவிக்கொண்டு வருதலான், நமது பெரிய மாலாகியநோய்க்கு மருந்தொன்று யாம் அறியப்பெற்றனம். இம்மருந்தினான் அந்நோய்தீரும், மயங்கல்வேண்டாம். எ - று.

எனவே, தலைவிநோக்குத் தலைவற்கு உயிர்ப்பாங்கியை அறிவித்தவாறு கண்டுகொள்க. ‘மருந்தொன்று யாம் அறியப்பெற்றனம்’ என இயையும். பேதுறல் - மயங்கல். நெஞ்சம் - அண்மைவிளி. மருமான் - வழித்தோன்றியோன். அவ்வழியை வளஞ்செய்தல் இயல்பாதலான் பாணா வளஞ்செய்வான் எனப்பட்டது. பூமி பாலகன் எனினும் அமையும். ‘மருமான்’ என்னும் வினைமுற்று வினையெச்சமாய் நின்றது. திருமானும் கயலும் ஆகுபெயர். ‘சென்று சென்று’ என்பது அடுக்கு. அவ்வொருமான் - உயிர்ப்பாங்கி. அதிகாரம் ‘பிரிவுழிக்கலங்கல்’ எனவைத்துக் ‘கலங்கல்’ கூறாது ‘உய்தல்’ கூறியது என்னையெனின், ‘மருளுற்றுரைத்தல்,’ ‘தெருளுற்றுரைத்தல்’ என்றிருவகையாற் கூறப்படுமென்று இலக்கணம் சூத்திரத்துட் கூறலான், ‘தெருளுற்றுரைத்தல்’ என்னும் இலக்கணத்தாற் கூறப்பட்டது. ()

பண்புபாராட்டல்.

பண்புபாராட்டல் எ - து. தலைவியதழகைப் பரிந்துகொண்டாடல். பண்பென்று அழகிற்குப் பெயரோவெனின், அழகும் பண்பும் பலவற்றினுள்ளும் ஓர் பண்பாதலான் அழகு பண்பெனப்பட்டது.

மயலார் களிற்றண்ணல் வாணன்றென் மாறையில் வாய்த்தவர்கண்
கயலா மெனிற்கயல் கள்ளங்கொள் ளாகருந் தாழளகம்
புயலா மெனிற்புயல் போதுகொள் ளாவிப் புனையிழையார்
இயலா மனத்தையும் வேறென்ன பேரிட் டியம்புவதே.

இ - ள். நெஞ்சமே! மயக்கமார்ந்த யானைப் பெருமையையுடைய வாணனது தென்மாறைநாட்டில் நமக்கு நல்வினைப்பயத்தான்வாய்த்த மடவாரது கண்களைக்கண்களன்று, கயலேயாமெனச்சொல்லின், அக்கயல்கள் கள்ளப்பார்வைகொள்ளா; கரிதாய்த் தாழ்ந்த அளகத்தை அளகமன்று, புயலாமெனின், அப்புயல் அலங்காரமாகப் போதுகளைப் புனையா; இவ்விரண்டிறப்பிற்கும் அழகின் பெருக்கத்தான் உவமைப்பொருள்களைப் பெயரிட்டுக்கூற இல்லையாமையான் புனைவிழையாரது இலக்கணமாகிய அனைத்துறுப்பையும் உவமப்பெயர்களில் வேறாக என்னபெயரிட் டியம்புவது?

எனவே, அழகின் பெருக்கத்தான் அவ்வுறுப்புகள் தமக்குத்தாமே உவமை கூறவேண்டுவ தல்லது வேறு பொருள்கள் ஒப்புக் கூறப்படாதாயிற்று.

மயல்-மயக்கம். வாய்த்தல் - முயற்சியான் எய்தற் கரிதாகிய பொருள் ஓர் காலத்து ஓரிடத்து நல்வினைப்பயத்தான் தானேவந்து எய்துதல். அளகம் - கூந்தல். இயல் - இலக்கணம். இயம்புவது - சொல்லுவது. நெஞ்சம் - முன்னிலையெச்சம். (௩௧)

பயந்தோர்ப்பழிச்சல்.

பயந்தோர்ப்பழிச்சல் எ - து. தலைவியைப் பெற்றோரைத் தலைவன் வாழ்த்தல்.

அணியுஞ் சுடர்விரி சங்குபங் கேருக மாடகமும்
மணியுந் தரமன்னி வாழிய ரோதஞ்சை வாணன்வெற்பில்
தணியுந் தொழிலொழித் தின்பமுந் துன்பமுந் தன்பதமே
பணியும் பணியெனக் குப்பயந் தாரைப் பயந்தவரே.

இ - ள். நெஞ்சமே! ஒளிவிரியப்பட்ட சங்கநிதியும் பதுமநிதியும் பூணாரமுஞ்செம்பொன்னும் நவமணியுங் கொடுக்க மாறாத நிலைபெற்றுத் தஞ்சைவாணன்வெற்பில், மற்றத்தொழில்களெல்லா மின்பமுந் துன்பமு மாதலின், தாழுந்தொழிலென்று அவற்றை யொழித்து, என்ஞான்றும் இன்பந்தருவதாய தன்னுடைய பாதத்தைப் பணியுந்தொழிலை எனக்குக் கொடுத்தாளைப் பெற்ற தாயுந்தந்தையும் என்னு மிவர்கள் பன்னாளும் வாழியர். எ-று.

அணி - பூணாரம். சுடர் - ஒளி. சங்கு - சங்கநிதி. பங்கேருகம் - பதுமநிதி. 'சங்குபங்கேருகம்' என்புழி உம்மைத்தொகை. ஆடகம் - பொன். மணி - நவமணி. ஓகாரம் - அசைநிலை. தணிதல் - தாழ்தல். பணியும் பணி - வணங்குந்தொழில். பயத்தல் - கொடுத்தல். பயந்தவர் - இருமுதுகுரவர். 'இன்பமுந் துன்பமுந் தணியுந்தொழில்' எனவும், 'அணியுமாடகமு மணியும்' எனவும் இயையும். உம்மைகள் எண்ணின்கண் வந்தன.

கண்படைபெறாது கங்குல்நோதல்.

கண்படைபெறாது கங்குனோதல் எ - து. அன்றிரவில் தலைவி தந்த வேட்கையான் துயில்பெறாது கங்குற்காலத்து நொந்துகூறல்.

வாமக் கலையல்குல் வாணுத லார்தஞ்சை வாணன்வெற்பில்
நாமக் கலவி நலங்கவர் போது நமக்களித்த
காமக் கனலவர் கையகல் காலைக் கடும்பனிகூர்
யாமக் கடலகத் துந்தணி யாதினி யென்செய்துமே.

இ - ள். நெஞ்சமே! தஞ்சைவாணன் வெற்பில், நாம் முன் இயற்கைப் புணர்ச்சியில் இன்பங்கொள்ளும்போது, அழகுபொருந்திய மேகலை சூழ்ந்த அல்குலையும், ஒளிபொருந்திய நுதலையுமுடைய குழலார் நமக்குக்கொடுத்த வேட்கைக்கனல் உள்ளடங்கியிருந்து, அவர் பிரிந்தவிடத்து கடிய பனி மிகுந்த இரவாகிய கடலின்கண் மூழ்கியுந் தணியாது; இன்று என்செய்யக் கடவோம்! எ - று.

வாமம் - அழகு. கலை - மேகலை. நல[illegible] - கொள்ளுதல். கையகல் - பிரிதல். யாமம் - [illegible] - சிறப்பு. இனி - இன்று. நெஞ்சம் - முன்னிலை[illegible] (௩௩)

'ஆயவெள்ளம் வழிபடக்கண்டு இ[illegible] ஒன்றும் 'மருளுற்றுரைத்தல்'; எனைய நான்கும் '[illegible]ருளுற்றுரைத்தல்'.

பிரிவுழிக்கலங்கல் [illegible]

'காட்சி' முதலாகக் 'கண்படை[illegible]' ஈறாகக்கூறிய கிளவி முப்பத்து[illegible]
நிகழ்ந்ததெனக் [illegible]

இடந்தலைப்பாடு.

அஃதாவது, இயற்கைப்புணர்ச்சி புணர்ந்த தலைவன் மற்றைத்தினத்தில் அவ்விடத்தேவந்து தலைமகளைக் கூடுதல்.

* "தெய்வந் தெளிதல் கூடல் விடுத்தலென்
றிவ்வோர் மூவகைத் திடந்தலைப் பாடே."— என்னுஞ் சூத்திர வகையால் இடந்தலைப்பாடு மூவகைப்படும்.

தந்ததெய்வந் தருமெனச்சேறல்.

தந்ததெய்வந்தருமெனச்சேறல் எ - து. முன் இயற்கைப்புணர்ச்சியில் அளித்தந்தவிதி இன்னும் அவ்விடத்திற் சென்றால் தருமெனச்சேறல்.

---

* அகப்பொருள்விளக்கம், களவியல், சூ. ௩௭.

மன்றும் பொதியினு மாமயில் சேர்தஞ்சை வாணன்வெற்பில்
துன்றும் புயலிளஞ் சோலையின் வாய்ச்சுறவுக்குழையைச்
சென்றுந்து சேல்விழி மின்னை முன்னாட்டந்த தெய்வநமக்
கின்றுந் தருநெஞ்ச மேயெழு வாழியிங் கென்னுடனே.

இ - ள். மன்றினிடத்தும் பொதியினிடத்தும் பெரிய மயில்சேருந் தஞ்சைவாணன் வெற்பிடத்து,புயல் நெருங்கிய இளஞ் சோலையினிடத்து, மகரக் குழையைப்போய்த் தள்ளுங் கெண்டைபோலும் விழியையுடைய மின்னை நெருநல் தந்தவிதியானது நமக்கின்றுஞ்சென்றால் தருமாதலான், என்னுடன் ஒருப்பட் டெழுவாயாக. எ - று.

மன்று - ஊர்க்கு நடுவாய் எல்லாருமிருக்கத் திண்ணைபோட்டிருக்கும் மரத்தடி. பொதி-அம்பலமாய் எல்லாருங்கூடியிருக்குங்கூட்டம்.என்னை,—

திருமுருகாற்றுப்படையுள் ‡"மன்றமும் பொதியினுங் கந்துடை நிலையினும்" என்பதனாற் காண்க.

மாமயில் - ஊரில்வளர்ந்த பெரியமயில். 'புயல்துன்றும்' என இயையும். சுறவுக்குழை - மகரக்குழை. உந்தல் - தள்ளுதல். சேல்விழி - உவமைத்தொகை. மின் - ஆகுபெயர். தெய்வம் - விதி. வாழி - முன்னிலையசை. (௬௪)

முந்துறக்காண்டல்.

முந்துறக்காண்டல் எ - து. முந்துபோலக்காண்டல்.

மருவாய நாப்பண் மயிலுரு வாய்நென்னல் வாணன்றஞ்சைத்
தருவாய்த் தழைகொய்து தண்புனங் காத்துத் தடங்குடைந்து
திருவாய் மலர்ந்து சிலம்பெதிர் கூயின்றோர் தெய்வதப்பெண்
உருவா யொருதனி யேநின்ற தாலென் னுயிர்க்குயிரே.

இ - ள். நெஞ்சமே! நெருநல் பொருந்திய ஆயக்கூட்டத்து நடுவே மயிலின்வடிவாக இற்றைப்பொழுது வாணனது தஞ்சைச் சோலையிடத்துத் தழைகொய்து, மழைபெய்தலாற் குளிர்ந்த புனங்காத்து, வாவியில் நீராடி, திருவாய்திறந்து மலையெதிர்கூவி, ஒப்பற்ற தெய்வப்பெண்ணுருவாய், ஒப்பற்றதனியே யென்னுயிர்க்குயிர் நின்றது, காண்பாயாக. எ - று.

ஆயநாப்பண் - ஆயக்கூட்டத்து நடு. தரு - சாதியொருமை. தடம் - வாவி. சிலம்பெதிர் கூவுதல் - ஓர்விளையாட்டு. ஆல் - அசை. நெஞ்சம் - முன்னிலையெச்சம். (௬௫)

‡ திருமுருகாற்றுப்படை, பழமுதிர்சோலை.

முயங்கல்.

முயங்கல் எ - து. புணர்தல்.

மானுகரன்றஞ்சை வாணன் வரோதயன் மாறையன்னாள்
தானுவி நின்றலர் தாமரை யேயத் தடமலர்வாய்
ஆனு தொழுகுசெந் தேனல்லி மேவு மரசவன்னம்
யானு கிடைப்பது வேயன்ன பான்மை யிருவர்க்குமே.

இ - ள். மானத்துக்குப் பிறப்பிடமாய் வரத்திலுதித்த தஞ்சைவாணனது மாறைநாடுபோல்வாள் வாவியினின்று மலர்ந்த தாமரை ; அவ்வாவித் தாமரையிடத்து நீங்காமலொழுகுஞ் செந்தேனையுடைய அகவிதழின்கண் மேவியிருக்கும் அரசவன்னம் யானுயினேன் ; இத்தன்மை யிருவர்க்குங் கிடைக்கத்தக்கதோ ! எ - று.

எனவே, ஊழ்வினைப்பயத்தானன்றி முயற்சியாற் கிடைக்கத்தக்கதோ வென்றவாறாயிற்று. 'மானுகரன்' 'வரோதயன்' இவ்விரண்டும் வடசொன் முடிபு ; வினைமுற்று வினையெச்சமாய்த் திரிந்தது. தான் - சந்தவின்பப் பொருட்டு. ஆவி-வாவி. ஆனுது - நீங்காது. அல்லி-அகவிதழ். ஆ-அதிசயக் குறிப்பு. கிடைப்பது-அரிதாகிய பொருள்வாய்ப்பது. ஏகாரம்-ஈற்றசை. ()

புகழ்தல்.

புகழ்தல் எ - து. தலைவன் தலைவியைப் புகழ்ந்துகூறல்.

அரும்பா மளவிற் றனத்தொடொவ் வாயல ராமளவில்
கரும்பா மொழிவத னத்தொடொவ் வாய்களி யானைசெம்பொன்
தரும்பாரி வாணன் றமிழ்த்தஞ்சை யான்றரி யாரின்முன்செய்
பெரும்பாவ மல்லது நீர்கின்ற பேறல்லி பெற்றிலையே.

இ - ள். அகவிதழையுடைய தாமரையே ! நீ அரும்பாகுங்காலம் கரும்பையொத்த மொழியையுடையாளது தனத்துக்கொப்பாகாய் ; அலராகுங் காலத்து முகத்தோடொப்பாகாய் ; களித்தயானையுஞ் செம்பொன்னும் நாவலர்க்குத்தரும் பாரியென்னும் வள்ளலுக் கொப்பான தமிழ்த்தஞ்சை நகரையுடைய வாணனுக்குப் பகைவரைப்போல முன்செய்த பெரும்பாவமல்லது, நீரிலே தவப்பேறுபெற்றிலையாயினை. எ - று.

எனவே, தலைவியைப் புகழ்ந்தவாறாயிற்று. தனம் - முலை. வதனம்-முகம். ‡ பாரி - ஓர்வள்ளல். தரியார் - பகைவர். அல்லி - அண்மைவிளி ; ஆகுபெயர். (௧௭)

---

‡ பாரி இன்னொன்பதனைச் சிறுபாணாற்றுப்படையுள் " சுரும்புண - நறுவீ யுறைக்கு நாக நெடுவழிச் - சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய - பிறங்குவெள் ளருவி வீழுஞ் சாரற் - பறம்பிற் கோமான் பாரியும்" என்றதனாலும், அதற்கு நச்சினார்க்கினியர் கூறிய வுரையானு முணர்க.

ஆயத் துய்த்தல்.

ஆயத்துய்த்தல் எ - து. ஆயக்கூட்டத்துத் தலைவியைச் செலுத்தல்.

மேவிக் கலைக்கட லென்புலன் மீனுண்டு மீண்டுவந்தென்
ஆவிக் கமலத் தமரன்ன மேகின் னயில்விழிபோல்
வாவிக் கயலுக ளுந்தஞ்சை வாணன் வரையினுடன்
கூவிக் கயங்குடை நின்குயி லாயங் குறுககவே.

இ - ள். கலையாகிய கடலின்மேவி, என்னறிவாகிய மீனையுண்டுபோய் மீண்டுவந்து, என்னுயிராகிய கமலத்திற் குடியாக வமர்ந்திருக்கும் அன்னமே! நின்னுடைய கூரிய கண்போல வாவியிற் கயல்கள் புரளுந் தஞ்சைவாணன் மலையில் எதிர் கூவிக் கயத்துட்குளித்து விளையாடும் நின்னுடைய குயிற்கூட்டம்போன்ற ஆயக்கூட்டத்திற் கூடுக. எ - று.

'கலைக்கடல்மேவி' என மாறுக. புலன் - அறிவு. கலையைக் கடலாகவும், புலனை மீனாகவும், அதனை யுண்ணுந் தலைவி அன்னமாகவும், அவ்வன்னமிருக்கும் உயிர்கமலமாகவும் உருவகஞ்செய்யப்பட்டது. 'மீண்டு வந்து' என்பதனால் **போய்** என்றசொல் வருவிக்கப்பட்டது. இயற்கைப் புணர்ச்சி புணர்ந்து இடந்தலைப்பாட்டில் வந்தமையால் போய் மீண்டு வந்தெனக் கூறியது.

அயில் - கூர்மை. விழி - கண். 'வாவி' என்புழி ஏழனுருபு தொக்கது. கயல் - மீன். 'கயல்போல்விழி' என்னாது, 'விழிபோற்கயல்' என்றது,

"பொருளது புணர்வே புணர்ப்போன் குறிப்பின்
மருள வரூஉ மரபிற் றென்ப."— என்னும் உவமவியற்சூத்திரத்தான் இன்னதுபொருளென்றும், இன்னது உவமையென்றுங் கூறத்தக்கதில்லை. பொருளும் உவமமும் புணர்க்கும்புலவனால் எவ்வாறு செய்யப்பட்டதோ அவ்வாறியையுமென்று கொள்க. இதனை இயலுடையார் விபரீதவுவமையென்ப. உகளுதல் - பிறழ்தல். 'அலர்த்தேன் குதிக்க வாவிக் கயலுகளும்' என்று பாடமோதுவாருமுளர். வரை - மலை. உடன்கூவுதல் - எதிர்கூவுதல். குடைதல் - குளித்தல். **குயிலாயம்** - உவமைத்தொகை, குறுகல் - கூடுதல்.

'தந்ததெய்வந் தருமெனச் சேறல்' ஒன்றும் தெய்வந் தெளிதற்குரித்து. 'காண்டல்,' 'முயங்கல்,' 'புகழ்தல்' மூன்றும் கூடற்குரிய. ஆயத்துய்த்தல்' ஒன்றும் விடுத்தற்குரித்து. (௩௮)

இடந்தலைப்பாடு - முற்றும்.

இரண்டாநாள் இடந்தலைப்பாட்டிற் கூடினானென்றுணர்க.

பாங்கற் கூட்டம்.

அஃதாவது மூன்றாநாள் பாங்கனாற் கூடுங் கூட்டம்.

* "சார்தல் கேட்டல் சாற்ற லெதிர்மறை
நேர்தல் கூடல் பாங்கிற் கூட்டலென்
றாங்கெழு வகைத்தே பாங்கற் கூட்டம்."—என்னுஞ் சூத்திர வகையாற் பாங்கற்கூட்டம் எழுவகையினையுடைத்தென்பது.

1 தலைவன் பாங்கனைச் சார்தல்.

தலைவன் பாங்கனைச்சார்தல் எ – து. தலைவன் இவ்வேட்கைநோய் பாங்கனாலன்றித் தீராதென்றெண்ணிப் பாங்கனைச்சார்தல்.

புனையாழி யங்கைப் புயல்வளர் பாற்கடற் பூங்கொடிவாழ்
மனையா கியதஞ்சை வாணனொன் னாரென மற்றிங்ஙனே
இனையா தெழுமதி நன்னெஞ்ச மேநமக் கின்னுயிரோ
அனையா னருட்புன லாலனங் கானல மாற்றுதற்கே.

இ - ள். நல்ல நெஞ்சமே! நமக்கினிய உயிர்போன்ற உயிர்ப்பாங்கன் அருட்புனலாற் காமாக்கினியை யவித்தற்கு, சக்கரத்தை யணியும் அழகிய கையினையுடைய புயல்போன்ற திருமால் கண்வளரும் பாற்கடலைப் பிறந்தகமாக வுடைய பூங்கொடிபோன்ற திருமகட்கு வாழ்க்கை மனையாகிய தஞ்சைமா நகரையுடைய வாணனுக்கு ஒன்னார்போல இவ்விடத்தில் வருந்தாது, அவன் பக்கற்சேர எழுவாயாக. எ - று.

'ஆழி புனை' எனமாறுக. புயல் - மேகம். 'ஆழியங்கைப்புயல்' என்பதும், 'பாற்கடற் பூங்கொடி' என்பதும் சிறப்புருவகம். 'பூங்கொடி வாழ்மனை யாகிய தஞ்சை' எனவே திருமகள் பிரியாத தஞ்சையென்றாயிற்று. ஒன்னார் - பகைவர். மற்று - அசை. இனைதல் - வருந்துதல். மதி - முன்னிலையசை. அருட்புனல் - அருள் நீர். அனங்கானலம் - காமாக்கினி; வடசொன்முடிபு. (௩௧)

2 பாங்கன் தலைவனை உற்றது வினாதல்.

பாங்கன் தலைவனையுற்றது வினாதல் எ - து. பாங்கன் தலைவனதுள்ளமுந் தோளும் வாடிய வேறுபாட்டைக்கண்டு நினக்கு இவ்வேறுபாடுற்ற காரண மென்னவென்று வினாதல்.

---

* அகப்பொருள்விளக்கம், களவியல், சூ. ௨௰.

வலம்புரி போற்கொடை வாணன்றென் மாறை மழைவளர்பூஞ்
சிலம்புறை சூர்வந்து தீண்டின போலொளி தேம்பியிவ்வா
றுலம்புனை தோளுநின் னுள்ளமும் வாடி யுருகிகின்று
புலம்புவ தென்னைகொல் லோசொல்ல வேண்டும் புரவலனே.

இ - ள். புரவலனே! சங்கிதிபோற்கொடுக்குங் கொடையையுடைய வாணனது தென்மாறை நாட்டின்க ணுள்ள முகில் கண்வளரும் பொலிவினையுடைய சிலம்பி லுறையுஞ் சூரென்னுந் தெய்வப்பெண் தீண்டியது போல, நின் திருமேனி ஒளிதேய்ந்து திரண்ட கல்லுப் புனைந்தாலொக்கும் நின்னுடைய தோளும் உள்ளமும் வாடி யுருகிகின்று இவ்வாறு புலம்புவதென்னே? சொல்லவேண்டும். எ - று.

வலம்புரி - ஆகுபெயர். மழை - முகில். வளர்தல் - கண்வளர்தல். பூ - பொலிவு. சிலம்பு - மலை. சூர் - ஓர் தெய்வப்பெண். தேம்பல் - தேய்தல். ‡ "தேம்பலஞ்சிற்றிடை - ஈங்கிவ ளுங்கனிவாய்" என்றார் பிறரும். உலம்-திரண்டகல். 'இவ்வாறு,' 'கொல்லோ' என்பன அசைநிலை. (௩௦)

௩ தலைவன் உற்றதுரைத்தல்.

தலைவன் உற்றதுரைத்தல் எ - து. இவ்வாறு வினவிய பாங்கற்குத் தலைவன் தனக்குற்ற வேறுபாட்டின் காரணத்தைக் கூறல்.

மலைமுழு துங்கொற்றம் வைக்கின்ற வாணன்றென் மாறைநண்பா
சிலைமுழு துஞ்சுற்று முற்றுமெய் யாகிற்பச் செங்கிறத்தே
கொலைமுழு துங்கற்ற கூரிய வாளி குளிப்பவின்றென்
கலைமுழு தும்பட்ட தாலொரு மான்முடிக் கண்ணியிலே.

இ - ள். எண்டிசையின் மலைமுற்றும் வெற்றிக்கொடியை வைக்கின்ற வாணன் தென்மாறை நாட்டிலிருக்கின்ற பாங்கனே! புருவமாகிய சிலை முழுதும் சுற்றுகிய திசைமுற்றும் எய்யாகிற்ப, கொலைத்தொழின் முற்றுங் கற்ற கண்ணாகிய கூரியவாளிகள் எனது செவ்விதாகிய நெஞ்சிடத்திலே மூழ்க, அப்போது என்னெஞ்சி லிருக்கின்ற கலையறிவு முற்றும் ஒரு பெண் வைத்த தலைக்கண்ணியிற்பட்டது. எ - று.

'மலைமுழுதுங் கொற்றம்.' எனவே எண்டிசைக்கும் அவாய்நிலையான் வந்தது. **கோற்றம்** - ஆகுபெயர். சிலை - ஆகுபெயர். உலகிற் சிலை நடு நிலையி லெய்யும்; இச்சிலை அவ்வாறன்றிச் சிலைமுற்று மெய்யா நின்றதென்று கருவிகருத்தாவாகக் கூறியது, விற்றொன்றுந் திசையிலன்றித் திசையெட்டினும் எய்கின்றமையான். சுற்றுகிய திசைமுற்றும் என்றது, எண்டிசையினும் இருந்துவரினுந் தைப்பது நெஞ்சிடத்தேயெனக்கொள்க.

‡ திருக்கோவையார், செ. ௧௧.

செங்கிறம் - மார்பு. கொலை முற்றும் - கொலைத்தொழின் முற்றும். வாளி - ஆகுபெயர். குளிப்ப - மூழ்க. கலை - ஆகுபெயர். ஒரு மானுக்கு முடிபோட்ட கண்ணியிலே கலையெல்லாம் பட்டதென ஒருபொருள் தோன்றியவாறு காண்க. ஆல்-அசை. கண்ணி - விலங்குகள் புட்கள் அகப்படுத்துங் கருவிக்கும், மாதர் குழலிற்சூடுங் குறுங்கோதைக்கும் பொதுவாகலான், இவ்விரண்டுவகைப் பொருளுந் தோன்ற நின்றது. (சக)

4 கற்றறிபாங்கன் கழறல்.

கற்றறிபாங்கன் கழறல் எ - து. வேதாகம புராணம் யாவுங்கற்றறிந்த பார்ப்பனப் பாங்கன் இடித்துக்கூறல். இடித்துக்கூறல் - உறுதிச்சொல் லுரைத்தல்.

தருகற் பகமன்ன சந்திர வாணன் றடஞ்சிலம்பில்
முருகக் கடவு ளனையவெற் பாமுகி லுமபிறையுஞ்
செருகக் கிளர்வரை வந்தவொர் பேதைக்குன் சிந்தையெல்லாம்
உருகக் கலங்கினை நீதரு மோமற் றுனக்கிதுவே.

இ - ள். இரவலர் யார்வந்து கேட்பினும் கேட்பவை யெல்லாங் கொடுக்குங் கற்பகத் தருவையொத்த சந்திரற்கு மகனாகிய வாணனது சிலம்பிலிருக்கும் முருகக்கடவுளை யொக்கும் வெற்பனே ! நீமுகிலும் பிறையுஞ் செருகும்படி யெழுந்த வரையிடத்தில் வந்த ஓர் பெண்ணுக்கு நின் சிந்தையெல்லாம் உருகக் கலங்கினை, உனக்கிது தகாது. எ - று.

சந்திரன் - வாணனுக்குத் தந்தை. தடஞ்சிலம்பு - பெரியமலை. செருகல்-செருகுதல். ‡" துவரமுடித்த துகளறுமுச்சிப் பெருந்தண் சண்பகஞ் செரீஇக் கருந்தகட்-டுளைப்பூ மருதின்." எனத் திருமுருகாற்றுப்படையுள் செரீஇ என்பதற்குச் செருகி யென உரைகூறியவாறு கண்டுகொள்க. கிளர்தல் - எழுதல். வரை - மலை. ஒகாரம் - எதிர்மறை. மற்று - அசை. 'இது தருமோ' என இயையும். (சஉ)

௫ கிழவோன் கழற்றெதிர்மறுத்தல்.

கிழவோன் கழற்றெதிர் மறுத்தல் எ - து. பாங்கன்கூறிய கட்டுரையைத் தலைவன் மறுத்துக்கூறல்.

மாலாய் மதம்பொழி மாதங்க வாணன்றென் மாறையன்னார்
சேலார் கருங்கண்ணுஞ் செங்கனி வாயுஞ் சிறியநுண்ணேர்
நூலார் மருங்கும் பெருந்தன பாரமு நும்மையன்றி
மேலா னவருங்கண் டாலுரை யாரிந்த வீரங்களே.

---

‡ திருமுருகாற்றுப்படை, திருப்பரங்குன்றம்.

இ - ள். மயக்கமாய் மதத்தைப்பொழியும் வாரணத்தையுடைய வாணனது தென்மாறைநாடு போல்வாரது சேல்போன்ற கருங்கண்ணும், செங்கனிபோன்ற வாயும், சிறுமையாகிய நுண்ணிய வழகாகிய நூல்போன்ற இடையும், பெரிய தனபாரமும், கண்டார் நெஞ்சினையுருக்குந் தன்மையில் வலியவென்பதனை யெளியவாகக் கூறினீர்; நும்மையன்றி மேலானவருங் கண்டாலுளையார்கள் இத்தன்மையாகிய வீரமொழிகள். எ - று.

எனவே, நீருங் காணாததன்மையால் இவ்வாறு கூறினீரொன்று கூறியவாறாயிற்று. மால் - மயக்கம். வாரணம் - யானை. சேல் - கயல். 'செங்கனிவாய்' என்புழி உவமைத்தொகை. ஏர் - அழகு. 'மேலானவரும்' என்புழி உம்மை சிறப்பும்மை; ஏனைய எண்ணின்கண் வந்தன. ஆர் என்பது ஒப்பு. பாங்கன் - முன்னிலையெச்சம். (௪௩)

௬ கிழவோற் பழித்தல்.

கிழவோற்பழித்தல் எ - து. அவ்வாறு கூறிய தலைவனைப் பாங்கன் பழித்துக் கூறல்.

சூரார் சிலம்பிற் சிலம்பிமென் னூல்கொண்டு சுற்றவெற்றிப்
போரார் களிறு புலம்பினைக் தாங்கொரு பூவைகொங்கை
வாரா லணைப்ப வருந்தினை நீதஞ்சை வாணன்வெற்பா
ஓராழி சூழுல கத்தெவ ரோநின்னை யொப்பவரே.

இ - ள். தஞ்சைவாணன் வெற்பிலிருப்பவனே! சூர்பொருந்திய மலையினிடத்துச் சிலம்பியானது மெல்லிய நூலைக்கொண்டு சுற்ற, மாற்றூர் படையிலே வெற்றிப்போர் செய்கின்ற யானையானது புலம்பி நைந்தாற்போலும், ஒரு பெண்ணினது வார்பொருந்திய கொங்கையாலணைப்ப நீ வருந்தினை; ஆதலால், ஒப்பற்ற ஆழிசூழ்ந்த வுலகத்தில் நின்னை யொப்பாவார்யார்? எ - று.

சூர் - தெய்வப்பெண்களிலோர்சாதி. சிலம்பு - மலை. சிலம்பி - சிலந்தி. களிறு - யானை. ஆங்கு-உவமையுருபு. பூவை - பெண். 'வார்க்கொங்கை.' என மாறுக. ஆழி - கடல். 'சிலம்பி மென் னூல் கொண்டு சுற்றவெற்றிப் போரார்களிறு புலம்பினைந் தாங்கு'-அந்நூற்றளையை நீங்கிவருதற்கரிதாய்ச் சங்கிலித்தளைக்கு நில்லாது அதன் வலியிழந்து புலம்பி நைந்தாற்போல, கடல்போல் வருகின்ற நால்வகைப் படையும் வென்று மனத்திற் கலங்காத வீரம் ஒரு பெண்வேட்கையாற் கலங்கி வருந்தினை, நின்னை யொப்பாவார்யார்? — எனக்குறிப்பாற் பழிப்புத்தோன்றியவா றுணர்க. (௪௪)

அவ்வெப்பமாற அக்கடன்மேல் விளாவுதற்குப் பாரிடத்து ஒரு தண்ணீருண்டோ? எ-று.

அறைதல் - சொல்லுதல். 'யானென் மேலறைவது' என மாறுக. வல் - சூது. அடர்தல் - நெருங்குதல். கோங்கை - ஆகுபெயர். அறைதல் - அடித்தல். முளை - மூங்கில். வெதும்பல் - வெப்பமுறல். அளி - அடிச்சந்த நோக்கிவந்தது. தரை - பார். புனல் - நீர். (௪௭)

10 எவ்விடத்தேவ்வியற்றென்றல்.

எவ்விடத்தெவ்வியற்றென்றல் எ-து. எம்பெருமான் இவ்வாறுகூறியும் ஆற்றானாய் இன்னதனால் தலைவியைக் கூடாதொழியின் இறந்துபடுமென்றுதேறி, தலைவனை நோக்கி நின்றாற்காணப்பட்டவுரு எவ்விடத்து எவ்வியலையுடையதென்று வினாவுதல்.

முகத்திற் பகழி யிரண்டுடை யார்க்கிட மூரிமுந்நீர்
அகத்திற் பிறந்த வரவிந்த மோவடை யார்தமக்கு
மகத்திற் சனியன்ன சந்திர வாணன்றென் மாறைவெற்போ
நுகத்திற் பகலனை யாய்தன்மை யேது நுவலெனக்கே.

இ-ள். நின்றாற் காணப்பட்ட முகத்தில் அம்புபோன்ற கண்ணிரண்டுடையார்க்கு இருப்பிடம், பெருமை பொருந்திய கடலகத்திற் பிறந்த தாமரையோ? பகைவர் தமக்கு மகநாளில்வந்த சனியையொக்கும் சந்திரவாணன் தென்மாறை வெற்போ? உழும் ஏர்ப்பெயலிற்பிணித்த நுகத்தின் நடுப்போன்ற தலைவனே! அவர்க் கிலக்கணம் யாது? அறிய எனக்குச் சொல்வாயாக; எ-று.

பகழி - ஆகுபெயர். மூரி - பெருமை. முந்நீர் - கடல். அரவிந்தம் - தாமரை. அடையார் - பகைவர்.

மகத்திற் சனிவருங்கால் உலகிற் றீமைபயத்தலால் 'அடையார்தமக்கு மகத்திற் சனியன்ன சந்திரவாணன்' எனக்கூறியது; ‡ "மகத்திற்புக்கதோர் சனியெனக்கானாய்" என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஓதியவாற்றானு முணர்க. 'நுகத்திற் பகலனையாய்' என்றது நடுவன்றி யோர்பக்கஞ்சாயின் அவ்விடத்திற் பாரமுறைக்கும், நடுவாகின் சமனாயிருக்கு மாதலான், இவனும் நடுவு நிலைமையை யுடையவனென்று கூறப்பட்டது.

தன்மை - இலக்கணம். நுவலல் - சொல்லுதல். ஓகாரம் இரண்டும் வினா. (௪௮)

---

‡ திருவொற்றியூர்த் தேவாரம், தே. ௯.

11 அவனஃ திவ்விடத் திவ்வியற்றென்றல்.

அவனஃ திவ்விடத் திவ்வியற்றென்றல் எ - து. தலைவன் என்னாற் காணப்பட்டவுரு இவ்விடத்து இவ்வியலையுடையதென்று பாங்கற்குக்கூறல்.

கனமே குழல்செங் கயலே விழிமொழி கார்க்குயிலே
தனமே முகையென் றனிநெஞ்ச மேயிடை தன்பகைக்கு
அனமே யருளிய வாணன்றென் மாறை மணிவரைசூழ்
புனமே யிடமிங்ங னேயென்னை வாட்டிய பூங்கொடிக்கே.

இ - ள். இவ்வாறு என்னைவாட்டிய பூங்கொடிபோல்வாட் கிருப்பிடம், தன் பகைவர்க்குக் காடே யிடமாகக் கொடுத்த வாணனது தென்மாறை நாட்டு முத்தத்தையீனும் மூங்கில்சூழ்ந்த தினைப்புனமே ; குழல், முகிலே ; விழி, செவ்வரி பொருந்திய கயலே; மொழி, கருங்குயிலே; தனம், முகையே ; இடை, என் தனிமையாகிய நெஞ்சமே. எ - று.

கனம் - முகில். கயல் - மீன். தனம் - முலை. முகை - மொக்குள். மணி - முத்தம். வரை - மூங்கில். புனம் - தினைப்புனம். இங்ஙனம் - இவ்வாறு. பூங்கொடி - ஆகுபெயர்.

'கார்க்குயிலேமொழி' எனவும், 'முகையேதனம்' எனவும் மாறுக. 'இங்ஙனே' என்புழி ஏகாரமும், 'பூங்கொடிக்கே' என்புழி ஏகாரமும் ஈற்றசை ; ஏனையதேற்றம்.

'தனிநெஞ்சம்' என்றது வேட்கைப் பாரத்தைச் சுமந்து நைந்ததனால், நெஞ்சம் முலைப்பாரத்தைச் சுமந்து நைந்த இடைக்கு உவமமாயிற்று. வரைகண்களை யுடைமையின் ஆகுபெயரான் மூங்கிற்குப் பெயராயிற்று. வரைமலையாகாதோவெனின், ஆகாது. என்னை, மேற்கூறும் பாங்கன் இறைவனைத் தேற்றுஞ் செய்யுட்கண் 'கழைவளர் சாரல்' என்றமையான் இவ்விடத்து மூங்கிலென்றே பொருள்கூறவேண்டுவதாயிற்று. ‡"மால்வரை நிவந்த சேணுயர்வெற்பின்." எனக் கூறியதனானுணர்க. (சகூ)

12 பாங்கன் இறைவனைத்தேற்றல்.

பாங்கன் இறைவனைத் தேற்றல் எ - து. இவ்வாறு நீ வருந்தத்தொழிக நீசொன்ன குறியிடத்துச் சென்று தலைவியைக்கண்டு யான் வருகின்றேனென்று தேற்றுதல்.

மழைவளர் மாளிகை மாறைவ ரோதயன் வாணன்வெற்பின்
இழைவளர் வார்முலை யேரிளந் தோகையை யிக்கணம்போய்க்
கழைவளர் சாரலிற் கண்டுனை யான்வந்து காண்பளவுந்
தீழைவளர் தாரண்ண லேதணி வாய்நின் றகவின்மையே.

---

‡ திருமுருகாற்றுப்படை, திருப்பரங்குன்றம்.